உ

சிவமயம்.

பிரபுலிங்கலீலை.

வேதாந்தசித்தாந்தவீரசைவசமையாசாரியராகிய

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது.

இஃது,

உறையூர்

மதுரைநாயகமுதலியாரவர்கள்

குமாரர்

சொக்கலிங்கமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

திருப்பரங்குன்றம்

அருணாசலசரணர்

குமாரர்

நாராயணசரணரால்

தஞ்சை

"ஸ்ரீ கிருஷ்ணவிலாச அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

விகாரி-வூல.

சிறப்புப்பாயிரம்.

—o—

திருக்குருகூர்

ஸ்ரீமத்-ஞானசித்தசுவாமிகளால்

இயற்றப்பட்ட,

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அருவுருவாயமைந்தருளியவணியுளவடியவருக்கருணை
க்காலும், பொருவருநல்வாக்காலும்புகழுறுமோர்வாதாலும்
புகலுங்காட்சிப், பெருவளவையானுமினும் பேசவொணாவ
னுபூதிப்பேற்றானுந்தன், றிருவடியினிழல்கொடுக்குமல்ல
மன்றன்றிருக்கதையைச்செய்தான்மன்னே (௧)

அப்பெருஞ்சீருடையவன்யாரொனிலறைதுங்கேண்மி
னிந்தவுலகெல்லாஞ், செப்பருஞ்சீர்படைத்ததுறைமங்கல
மாம்பதியமருஞ்சீலத்தான்றான், தப்பருஞ்சீர்வீரசைவம்
பகல்செய்வான்போல் விளக்குந்தகையான்செல்வ, வைப்
பெனவே துறவொழுக்கமோம்புசிவப் பிரகாசவள்ளற் கோ
மான் (௨)

அத்தகையநூலினைநற் *புத்தியுளோருறையுறையூரகத்
துமேவி,வித்தகமாரிருதயமாமதுரைநாயகக்குரிசில்விளக்க
மோங்கப், பத்தியெலாமுலகறியவுருவெடுத்தவதரித்தோ
ன்பன்னூலாய்ந்து, எத்திரமார்சொக்கலிங்கவேணுக்கிவச்
சிவிட்டானிவன்யாரென்னில் (௩)

தித்திக்குங்கவிபாடவெமக்கருளுங் குமரவேள் சிறக்க
மேவும், எத்திக்கும்போற்றுதிருப்பரங்குன்றப்பதிவாழ்வோ
னிசைமிக்கோனற், புத்திக்கிமிகவினியவெண்ணீறுங் கண்
டிகையும்பொருளாக்கொண்டோன், அத்திக்கிநிகர்கல்வியு
டையானன்னடையான்பொய்யடையானென்றும் (௪)

வீங்குபுகழமைவீரசைவமெனும்பயிர் வளர்க்கு மேகம்
போல்வான், தாங்குபுகழமையருணாசலசரணப்பெருந்தகை
யோன்பாலப்பன்னு, ளோங்குபுகழமைதரச்செய்மாதவத்
தின்பயனாகவுதித்தசீலன், தேங்குபுகழமைநாராயணசரண
னெனும்பெயர்கொள்சீர்த்தியோனே (௫)

---

* புத்தி=செல்வம்.

உ

சிவமயம்.

துறைமங்கலம்.

சிவப்பிரகாசசுவாமிகள் வேலையசுவாமிகள் கருணைப்பிரகாச சுவாமிகளென்னும் மூவர்சரித்திரச்சுருக்கம்,

---

தொண்டைமண்டலத்திலே, முத்திநகரம் ஏழனுள் ஒன்றாய் விளங்குகின்ற காஞ்சீபுரத்திலே, ஏறக்குறைய முன்னூறு வருடங்களுக்குமுன் தொண்டைமண்டல வேளாளர்க்குத் தீக்ஷா குருவாகக் குமாரசுவாமிப் பட்டாரகர் என்பவர் ஒருவரிருந்தார். அவர் திருக்கார்த்திகைத் தரிசனத்திற்காகத் திருவண்ணாமலை யாத்திரைக்குப்புறப்பட்டு ஒருநாள், வழியில் ஒரு நந்தனவனத்திற்றங்கிச் சிவபூசைமுடித்து, அன்று சாயங்காலமே தாங்குறித்த தலத்தையடைந்து, அங்குள்ள ஈசானிய தீர்த்தத்திலே அநுட்டானஞ் செய்துகொண்டு, தமது பூசைப்பேடகத்தைப் பரிசனர்களிடத்துவினவ? அவர்கள் பகலிற்றங்கியிருந்த விடத்தில் வைத்து மறந்துவந்ததாக அச்சத்தோடு விண்ணப்பஞ்செய்தனர். அதுகேட்டு மிகமனக்கலக்கமுற்று, அப்பரிசனர்களோடு அவ்வூர் மனிதனொருவனையுஞ்சேர்த்து பகற்றங்கியிருந்த நந்தனவனம் வரையும் பரிசோதித்து வரும்படி அனுப்பிவிட்டுத் தாம் ஓரிடத்திற்போய், நம்முடைய ஆன்மார்த்தமாகிய உடையவரைவிட்டுப்பிரியும்படி நேரிட்டதே என்னும் வருத்தத்தால் அன்றிரவுமுழுதும் நித்திரையின்றிச் சிவத்தியானஞ் செய்துகொண்டிருந்தனர். அத்தருணத்தில், அவரது சிவபுண்ணிய முதிர்ச்சியினாலே திருவண்ணாமலையிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமான் ஓர் சங்கமத்திருவுருவங் கொண்டு அவரிடத்திற்கெழுந்தருளி, தம்மெதிர்வந்து தமக்கு நிகழ்ந்த ஆபத்தைத்தெரிவித்து வணங்கிநின்ற அவர்மீது கிருபாநோக்கஞ்செய்து, "நீர் அங்கம்வேறு இலிங்கம்வேறாக இருந்தமையால் இவ்வாறு பிரியும்படி நேரிட்டது, இலிங்காங்க சம்பந்தியாயிருந்தால் இவ்வண்ணம் நேரிடுதலியலாது, உமது பூசைப்பேடகம் நாளை உதயத்தில் வந்துசேரும். நீர் இது முதல் இலிங்கதாரணஞ்செய்துகொள்ளும் "என்று அநுக்கிரகிக்க; அவர் இச்செய்கை தமது சீடர் பந்துக்கள் முதலானவர்

களுக்கு விரோதமாக இருக்கும் என்பதைத் தெரிவித்து நின்ற
னர். அதுகேட்ட சிவபெருமான்" அந்தச்சீடர்முதலியோரா
பெறப்படும் பயன் சிறிதுமில்லை. நமது கட்டளைப்படி நீர் சி
லிங்கதாரணஞ் செய்துகொண்டால் உமக்கு மூன்று புத்திரர்
ளும் ஒரு புத்திரியும் பிறப்பார்கள். அவர்களால் இம்மைமறு
மையின்பங்களும் முத்தியுஞ்சித்திக்கும். ஆதலால், இவ்வா
லயத்திற்குத் தெற்குவீதியிலுள்ள மடத்திலிருக்கும் குருதேவ
ரிடத்திலே சிவலிங்கதாரணதீக்ஷை செய்துகொள்ளும்" என்று
வற்புறுத்தி ஆஞ்ஞாபித்து, வீரசைவசமயாசார நெறிகளையு
போதித்து, அவ்வாறே குருதேவருக்குங் கட்டளையிட்டு மறை
ந்தருளினர்.

மறுநாட்காலையில், சிவபெருமானது திருவாக்கின்படியே
பூசைப்பேடகம் வரப்பெற்று, ஸ்ரீ குருதேவராலனுப்பப்பட்ட
அடியார்களோடு மடாலயத்தையடைந்து குருதேவரைத் தரிசி
த்து, அவராலே சிவலிங்கதாரணதீக்ஷை செய்யப்பெற்று, திரு
க்கார்த்திகைத்திருவிழா நிறைவேறியபின் குருதேவரிடத்தில்
விடைபெற்றுக்கொண்டு காஞ்சீபுரத்திற்கு வந்து, தமது அநு
ட்டானப்படியே சீடர்களுக்குஞ் சிவலிங்கதாரணதீக்ஷை செய்
துகொண்டிருந்தனர். அக்காலத்திலே, அவருக்கு அண்ணா
மலையார் அநுக்கிரகித்தபடியே மூன்று புத்திரர்களும் ஒரு புத்தி
ரியும் அவதரித்தார்கள். அவர்கள் முறையே சிவப்பிரகாசர்,
வேலாயுதம், கருணைப்பிரகாசம், ஞானம்பிகை என்று நாமக
ணமுடையராய் முதல்மூவரும் கல்வியிற்பயின்று வருங்கால
தில், தந்தையாராகிய குமாரசுவாமிஐயர் சிவலிங்கவைக்கியம
யினர்.

பின்பு மூத்தவராகிய சிவப்பிரகாசசுவாமிகள் தமது சகோ
தரர்களை அழைத்துக்கொண்டு திருவண்ணாமலைக்குப் போய்
குருதேவரைத்தரிசித்து அங்கேவாசஞ்செய்துகொண்டு, தமது
கல்விமுயற்சியிற்றளராது வாழும் நாள்களுள் ஓர்நாள், அந்த
சோணசைலத்தை பிரதக்ஷணஞ்செய்து வரும்போதே சோண
சைலமாலையெனப் பெயரிய நூறுசெய்யுள்களாற் றோத்திரம
பண்ணினர். பின்னும் பேரிலக்கணங்களைப் பெரிதுங் கற்கவ
ரும்பித் தமது சகோதரர்களுடனே தக்ஷிணதேசத்திற்குப் பி
யாணமுற்று, வாலிகண்ட புரத்திற்குத் தென்பாகத்திலுள்ள
துறைமங்கலம் என்னும் நகரத்தைச்சார்ந்த ஒரு நந்தனவனத்
தில் சிவபூசை செய்துகொண்டிருந்தனர். அக்காலத்தில் அ
கிராமாதிபதியாயும் சிவலிங்கதாரியாயும் குருலிங்கசங்கமபத்தி

யிற் சிறப்புற்றவராயும் விளங்கிய அண்ணாமலை ரெட்டியாரெ ன்பவர், சிவப்பிரகாசசுவாமிகள் வரவைக்கேள்வியுற்று, அங்க டைந்து தரிசித்தமாத்திரத்தில் அவரிடத்தே அநுக்கிரகம்பெற விரும்பி அடிமைபூண்டு, "சுவாமீ, தேவரீர் இவ்விடத்தில் வாசஞ்செய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்து, அவரை புடன்படுத்தித் தங்கள் குருவாகிய சென்னவசவையர் மடத்தி ற்கு மேற்றிசையில் ஒரு திருமடங்கட்டி, அதில் சுவாமிகளை எழுந்தருளுவித்து, அகோராத்திரம் பிரிவின்றி அணுக்கத் தொண்டராயமர்ந்திருக்க; சிவப்பிரகாசசுவாமிகள் அவருக்குச் சன்மார்க்கங்களைப் போதித்துக்கொண்டு, இரண்டு வருஷம் வரையில் அங்கே எழுந்தருளியிருந்தார்.

அதன்பின்பு தாங்கொண்டகருத்தை நிறைவேற்றவிரு ம்பி தக்ஷிணதேசத்திற்குச்செல்லல்வேண்டுமென்பதை அவரு க்கறிவுறுத்தித் திருநெல்வேலியையடைந்து, பொருனை நதி தீரத்திலிருக்கின்ற சிந்துபூந்துறையில் தருமபுரவாதீனத்து வெள்ளியம்பலவாண சுவாமிகள் இலக்கண விலக்கியங்களில் அதிவல்லவர்களாய் இருக்கின்றார்கள் என்பதைக் கேள்வியுற்று அவ்விடத்திற் சென்று, சுவாமிகளைக்கண்டு, அவர்களாலுபசரிக் கப்பெற்று,தாம் இலக்கணங்கற்கவேண்டி வந்தமையைத் தெரி வித்துக்கொண்டனர். அச்சுவாமிகள் சிவப்பிரகாசசுவாமிகளு டைய இலக்கியப்பயிற்சியை அறிதற்பொருட்டு கு, என்பதை முதற்கொண்டு ஊருடையான், என்பதை இடைப்பெய்து கு, என்பதையே ஈற்றினும் கொண்டுமுடியும்படி ஒருவெண்பாப் பாடுக என்றுகூற; சுவாமிகள்

> குடக்கோடுவானெயிறுகொண்டார்க்குக்கேழன்
> முடக்கோடுமுன்னமணிவார்க்கு—வடக்கோடு
> தேருடையான்றெவ்வுக்குத்தில்லைதோன்மேற்கொள்ள
> லூருடையானென்னுமுலகு.

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளினர். மேலை வெண்பாவினுள் வடக்கோடு தேருடையான் என்று அமைத்த மையை சுவாமிகள்வியந்துபாராட்டி, சிவப்பிரகாசசுவாமிகளை தழுவித் தம்மருகிருத்தி, அவர் சகோதரர்களாகிய வேலையசுவா மிகள், கருணைப்பிரகாசசுவாமிகளென்னும் இருவருக்கும் ஒரு பக்ஷத்துள் பஞ்சலக்ஷணங்களையும் பாடஞ்சொல்லி முடித்தார். அது கண்ட சிவப்பிரகாச சுவாமிகள் அண்ணாமலை ரெட்டியா ரென்பவர் தங்களுக்குவழிச்செலவிற்குபகரித்தஐந்நூறுபொன் னையும் குருதக்ஷிணையாகவைத்து உபசரிக்க; சுவாமிகள். இது,

நமக்கு வேண்டுவதில்லை. நம்மைத்தூஷித்தலையே இயல்பாகக் கொண்டு திருச்செந்தூரில் வசிக்கும் தமிழ்ப்புலவரொருவரைத் தங்கள் வாயிலாக வெற்றிகொண்டு அவர்வந்து நம்மை வணங்கும்படிசெய்து கோடலே குரு தக்ஷிணையாகும்'' என்றுமறுத் தருளினர்.

அவர்கருத்தறிந்த சுவாமிகள் அதற்குடன்பட்டு, அவர் மாணுக்கரோடும் திருச்செந்தூருக்குப்போய், முருகக்கடவுளைத்தரிசனஞ் செய்து பிரதக்ஷணம் வரும்போது; அச்சுவாமிகளாற் சுட்டப்பட்ட தமிழ்ப்புலவர், எதிர்ப்பட்டுச் சிவப்பிரகாச சுவாமிகளை யாவரென்று அவருடன் வந்த மாணுக்கரிடத்திற்றுனே வினவி, மேற்படி சுவாமிகளிடத்திற் பாடங்கேட்டசுவாமிகள் என்பதை அறிந்துகொண்டு, அவர்களைத் தமதுவழக்கப்படியேதூஷிக்கத்தலைப்பட்டார். அப்பொழுது சிவப்பிரகாசசுவாமிகளுக்கும் புலவருக்கும் கலகநேரிட; புலவர் சுவாமிகளை நூதனவகையாற்பாடி வெற்றிபெறுவோ மெனத்துணிந்து "நாமிருவரும் நிரோட்டகயமகம் பாடுவோம். முன்னர்ப் பாடிமுடித்தவருக்கு அஃதியலாதார் அடிமையாவோம்'' என்று வாக்குத்தத்தஞ்செய்தார். சுவாமிகள் தங்கருத்து நிறைவேறும் வாயில் இதுவே என்று கருதி அதற்கிசைந்தருளி, அவரோடு பாடத்தொடங்கி உடனே அத்தலத்து முருகக்கடவுண்மீது நிரோட்டகயமகவந்தாதித்தொடையாக முப்பது கட்டளைக்கலித்துறை பாடிமுடித்தருளினர். அதுகண்டு புலவர், தாம் ஒரு செய்யுளேனும் பாடிமுடியாமையையுணர்ந்து, சுவாமிகளுடைய திருவடிகளைவணங்கி, "அடிமையாயினேன்'' என்று விண்ணப்பஞ்செய்துகொண்டார். சுவாமிகள் தமதடிமையாயமைந்த அப்புலவரை ஆதீனத்திற்கழைத்துவந்து தாம் போதகாசிரியராகக்கொண்ட அச்சுவாமிகளுக்கு, அடிமையாக்கிவிட்டார். சுவாமிகள் திருவுளமகிழ்ந்து சிவப்பிரகாச சுவாமிகளைப்பார்த்து, "தாங்கள் பாடியசெய்யுளிற் குறித்தபடியே சிதம்பரத்திற் சிலகாலம் வாசஞ்செய்தருளுக'' என்று விடைகொடுத் தனுப்பியருளினர்.

சுவாமிகள் அவ்விடத்தினின்றும் நீங்கி சிவஸ்தலங்கடோறுஞ்சென்று சுவாமிதரிசனஞ்செய்து, துறைமங்கலத்தைச்சார்ந்து முன்போலவே அண்ணாமலை ரெட்டியாரென்பவருக்குத் திருவருள்பாலித்து, அவரது வேண்டுகோளின்படி அவராளுகையுளமைந்த, வாலிகண்டபுரத்தின் வடமேற்பாகத்துள்ள திருவெங்கை மாநகரத்திலே, தம்பொருட்டு அவராற்கட்டப்பட்ட திருமடத்தில் வசிக்குநாளில், அவ்வூர்ப்பிடாரியாரது உற்சவ

ிரதத்தால், அடியார்களுக்குபயோகமாகத் திருமடத்தெதிரி
பிருந்த முருங்கைமரம் அழிந்தமைகண்டு

திருந்துதமிழிலக்கணவைந்தினுக்கோவைவிருத்தகிரிச்
செல்வர்க்கோதும், பெருந்தகைமையுடையம்யாம்விடுமோலை
வெங்கனூர்ப்பிடாரிகாண்க,விரும்புவியிலொருமுருங்கைக்கொ
ம்பொடியாமற்காத்திங்கிருக்குநீநம், முருங்கைதனைவேரோடுங்
களைந்தனையென்றாலுனக்குமுறைநன்றாமோ.

என்னும் திருவிருத்தத்தை அருளியமாத்திரத்தே,அவ்விர
நம் அழிந்தொழிந்தது, அதன்பின் சிலகாலமங்கிருந்து, அத்
தலத்திலுள்ள பழமலைநாதர்மீது திருவெங்கைக்கோவை, திரு
வெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா, திருவெங்கையலங்
காரம் என்னும் நான்குபிரபந்தங்களை அருளிச்செய்து, பின்பு
துறைமங்கலத்தைத யடைந்தார். தமதடியாராகிய அண்ணாமலை
ரெட்டியாரென்பவர் சுவாமிகளை "தேரீர் விவாகம் செய்து
கொள்ளவேண்டும்" என்றுபிரார்த்திக்க ; அதற்குத்தரமாக

சேய்கொண்டாருங்கமலச்செம்மலுடனேயரவப்
பாய்கொண்டானும்பரவும்பட்டீச்சுரத்தானே
நோய்கொண்டாலுங்கொளலாநூறுவயதளவிருந்து
பேய்கொண்டாலுங்கொளலாம்பெண்கொள்ளலாகாதே.

என்னும் தரவு கொச்சகக் கலிப்பாவைப் பாடியருளிய
சுவாமிகள் கருத்துணர்ந்து, பின்பு வேலையசுவாமிகளைப் பிரார்
த்திக்க ; அவர் சிவப்பிரகாசசுவாமிகளுடைய கட்டளை எவ்வாறு
மோ என்னுங்கருத்தால் உடன்படல் மறுத்தலென்னும் இரண்
டுமின்றி மௌனராயினர். பின்னர் யாத்திரையினின்றும்வந்த
கருணைப்பிரகாச சுவாமிகளிடத்தில் தமது வேண்டுகோளை
விண்ணப்பஞ் செய்தமாத்திரத்தில், அவர் அதற்குத்தரமாக

நாணியென்பதைநாரியென்றுரைத்திடுநசையால்
வேணுவானதுவளைந்துபோய்ப்புகுந்ததுவென்றாற்
காணலாவதோருருவமெய்ந்நாரியைக்கண்டாற்
பூணுவார்மயல்காளையரென்பதும்புதிதோ.

என்னும் செய்யுளால் தமது கருத்தை உள்ளபடி தெரி
வித்தனர். சிவப்பிரகாசசுவாமிகள் தம்பின்னோரிருவர்கருத்தை
யும் உணர்ந்து, அவர்களுக்குத் தாம் துறவறம் பூண்டமையைத்
தெரிவித்து " மணம் புரிவித்து," இல்லறத்தை ஒழுங்குபெற
நடத்தி வாழ்க என்று ஆசீர்வதித்து அவர்களை நிறுத்திவிட்டு,
தம்மிடத் தன்பு பூண்ட அண்ணாமலை ரெட்டியாரோடு சிதம்

பரத்திற்கு எழுந்தருளி, அங்கே ஒரு திருமடங்கட்டுவித்து அதில் வீற்றிருந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, சிவப் பிரகாசவிகாசம், தருக்கபரிபாஷை, சதமணிமாலை, நால்வர்நான்மணிமாலை என்னும் பிரபந்தங்களைச் செய்தருளினர்.

பின்பு சிதம்பரத்தை அருமையாகநீங்கி, பிறதலங்களையும் வணங்கி, திருக்காட்டுப் பள்ளியையடைந்து, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு அங்கிருக்கும்போது, கல்வியறிவிற்சிறந்த ஒருபெண் வீதியினிடத்தே உப்புவிற்றலைதலைக்கண்டு. இறக்கமுற்றுத் திருநோக்கதீக்ஷை செய்து, அவளதுநல்லூழையும் பரிபக்குவத்தையு முணர்ந்து, அவளுடைய புலமையைப் பிறர்க்குப்புலப்படுத்தத் திருவுளங்கொண்டு

நிறைய வுளதோவெளிதோ கொளுவேம்
பிறையைமுடிக்கணிந்தபெம்மா—னுறையுந்
திருக்காட்டுப்பள்ளிதிரிபாவாய்நீயிங்
கிருக்காட்டுப்பள்ளியெமக்கு.

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளிய மாத்திரத்தே, அப்பெண்,

தென்னேங்குதில்லைசிவப்பிரகாசப்பெருமான்
பொன்னேங்குசேவடியைப்போற்றினே—மன்னேன்
றிருக்கூட்டமத்தனைக்குந்தெண்டனிட்டோந்தீராக்
கருக்கூட்டம்போக்கினேங்காண்.

என்னும் வெண்பாவைப் பாடிக்கொண்டு, தரிசனவேதியனெதிர்ப்பட்ட இரும்புபோல மனமுருகி மிக்கவினைவொடு விழுந்து நமஸ்கரித்தெழுந்து கூப்பியகரத்தினளாய் நிற்க; அப்பெண்ணிற்கு உண்மைஞானமுண்டாகும்படி கிருபாநோக்கஞ் செய்துசிலகாலமங்கிருந்தனர்.

அதன்பின் சுவாமிகள் காஞ்சிபுரத்தைத் தரிசிக்கவிரும்பி, அண்ணமலையொட்டியாரோடும் பிரயாணப்பட்டு வரும்போது வழியிலே சாந்தலிங்க சுவாமிகளைக்கண்டு கலந்து, களிகூர்ந்தபின் அவரை நோக்கித்தாங்கள் பேருரொன்னுந் திவ்வியதலத்தினின்றும் எனதயுத்தேசித்து எழுந்தருளியதென்று வினவ: அவர் ,,திருக்கைலாயத்தில் சிவபெருமானருளியவாறே சமுத்திரத்தில் திருவவதாரஞ்செய்து வீரசைவசமயத்தை உலகத்தில் நிலைபெறநாட்டி முருகக்கடவுளது வரப்பிரசாதியாய் மயிலமலையில் விளங்கியிருந்த சங்குகன்னனென்னுங் கணத்தலைவரது மாணக்கருட்சிறந்த சிவஞானபாலைய சுவாமிகளைத் தரி

சித்தல்வேண்டுமென்னும் காதலால் வந்தேன்,, என்றுரைத்தனர். பின்னர் இருவரும் களிகூர்ந்து பொம்மைய பாளையத்தைச் சமீபித்தவுடன் சாந்தலிங்கசுவாமிகள் சுவாமிகளைநோக்கி „நாமிருவரும் சிவஞான பாலையசுவாமிகளைத் தரிசிக்கவேண்டி யிருப்பதால் அவர்கண்மீது சிலதோத்திரங்கள் பாடுக,, என்றுபிரார்த்திக்க; „நாம்நரஸ்துதி பண்ணுகிறதேயில்லை,, என்று மறுத்துவிட்டு சாந்தலிங்கசுவாமிகளோடு அவ்வூரிலுள்ள ஐயனார்கோயிலில் அன்றிரவு துயில்கொண்டார். அப்பொழுது முருகக்கடவுள் மயில்வாகனரூடராய் எழுந்தருளி ஒருபாத்திரத்தில் விடுபுஷபங்களைவைத்து "இவற்றை மாலையாகத்தொடுத்து நமக்கு அணியக்கடவாய்" என்று திருவாய் மலர்ந்து மறைந்ததாகக் கனவுகண்டு, அதனைச் சாந்தலிங்கசுவாமிகளுக்குத் தெரிவிக்க; அவர் " சிவஞானபாலையசுவாமிகள் முருகக்கடவுளிடத்து அதிபத்திமைபூண்ட உள்ளத்தோடு விளங்கியிருத்தலால், அதுபற்றியே அக்கடவுள் தங்களுக்குச் சொற்பனத்தில் சுவாமிகள் மகிமையை இவ்வாறாகப் புலப்படுத்தினர்" என்று வலியுறுத்தினர். உடனே அச்சுவாமிகள் மீது தாலாட்டு, நெஞ்சுவிடுதூது என்னும்பிரபந்தங்களைப்பாடி அவர்சந்நிதானத்திலே அரங்கேற்றி, ஞானோபதேசம்பெற்று அந்தஞானாசாரியரது கட்டளைப்படியே தமது தங்கையாகிய ஞானம்பிகையைச் சாந்தலிங்கசுவாமிகளுக்கு விவாகஞ்செய்து கொடுத்துவிட்டு, தம்மை நெடுநாளாகப்பிரியாது அத்தியந்த அன்புடையராய் உடன்றொடர்ந்துவந்த அண்ணாமலை ரெட்டியாரைத் துறைமங்கலத்துக்குப்போகும்படி ஆஞ்ஞாபித்து, ஞானாசாரியரைத் தரிசித்துக்கொண்டு, அவ்விடத்திற்றானே இருந்தார்.

சிலகாலஞ்சென்றபின் ஞானாசாரியரிடத்தே விடைபெற்றுக் காஞ்சீபுரத்தையடைந்து சுவாமிதரிசனஞ்செய்து அங்கிருக்கும்பொழுது, நிஜகுணயோகியென்பவராற் கீர்வாணகன்னடபாஷையிற் செய்யப்பட்டிருந்த விவேகசிந்தாமணியின் ஓர் பாகமாகிய வேதாந்தபரிச்சேதத்தை வேதாந்தசூடாமணியெனப் பெயர்தந்து அதனையும், இரேணுகரொன்னுங்கணத்தலைவரால் அகத்தியமகாமுனிவருக்கு உபதேசிக்கப்பட்ட சித்தாந்தசிகாமணியையும், பிரபுதேவர்சரித்திரமாகிய பிரபுலிங்கலீலையையும் தமிழிற்பாடியருளி, சிவஞானபாலையசுவாமிகளைத் தரிசித்தல்வேண்டுமென்னும் பேராசையால், அவர்மீது பிள்ளைத்தமிழ், திருப்பள்ளியெழுச்சி என்னும் இரண்டு பிரபந்தங்களையுஞ் செய்து

கொண்டு, கூவமெனவழங்கும் திருவிற்கோலத்தின் வழியாக வரும்பொழுது, அந்நகரத்தார் சுவாமிகளின் அற்புதமகிமைக ளைக்கேள்வியுற்று எதிர்கொண்டுபசரித்து அத்தலபுராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்தருளும்படி பிரார்த்திக்க; அவர்களது வேண்டுகோளுக்கியைந்து, புராணம்பாடி முடித்து, ஞானாசாரி யாரையடைந்து, தரிசனஞ்செய்து மேற்சொல்லியபிரபந்தங்களைச் சந்நிதியிலரங்கேற்றி, உடன்வசித்திருந்தார்.

பின்னர் ஞானாசிரியரிடத்தே விடைபெற்றுக்கொண்டு விருத்தகிரியையடைந்து, பழமலைநாதரையும் பெரியநாயகியம் மையாரையும் தரிசித்துவணங்கி, அவ்விடத்தில் ஞானசாரியர் கட்டளைப்படி ஒரு திருமடமமைத்துத் தம்வரவுநோக்கி எதிர் கொண்டு வணங்கிநிற்கும் சிதம்பரபூபதியைச்சிறப்பித்து,

வெங்கைப்பழமலையார்மீதுகோவைவியந்துரைக்கு
மெங்கட்கினியசிவஞானதேவனிசைவுகொடு
திங்கட்பவனியிருகான்முதுகுன்றர்சேர்மறுகின்
மங்கைச்சிதம்பரபூபதி நல்குமடமிதுவே.

என்னும் கட்டளைக்கலித்துறையைப் பாடியருளி அத் திருமடத்தடைந்து வீற்றிருந்து, பழமலையந்தாதி பிக்ஷாடன நவமணிமாலை, கொச்சகக்கலிப்பா, பெரியநாயகியம்மை நெடுங் கழி நெடிலாசிரியவிருத்தம், பெரியநாயகியம்மை கலித்துறை என்னும் பிரபந்தங்களைத் திருவாய்மலர்ந்தருளினர். ஒருநாள் மணிமுத்தநதியிலே ஸ்நானஞ்செய்து வரும்பொழுது அதனரு கிருந்த மாஞ்சோலையின்புறத்து வறிதே விழுந்துகிடந்த மாங் கனியைக்கண்டு, இது சிவலிங்கப்பெருமானுக்கு நைவேத்திய த்திற்கு உபகரணமாகுமென்று கருதி எடுக்க, அதுகண்ட அச் சோலைக்காவலாளன் சுவாமிகளின் மகிமையறியாது மடிபிடித் திழுத்து மனவருத்தஞ் செய்தமையைக்கண்டு

அடுத்துவருந்தொண்டனுக்காவந்தகனைத்தாளா
லடர்த்ததுவுஞ்சத்தியமேயானால்—லெடுத்தவொரு
மாங்கனிக்காவென்னைமடிபிடித்தமாபாவி
சாங்கனிக்காதித்தன்வரத்தான்.

என்னும் வெண்பாவை அருளிச்செய்தனர். அவ் வெண் பாவி லமைத்தபடியே அவன் சூரியனுதயமாக உயிர்துறந்து. சுவாமிகளைத் தரிசித்துப் பரிசிக்கப்பெற்றுத் தண்டிக்கலுற் றமையால் நற்கதிபெற்றுய்ந்தான். பின்னும் சிலநாளங்கிருந்து

திருப்பதிகம்பெற்ற திருத் தலங்கடோறும் யாத்திரை செய்து வரும்பொழுது, அகராதிசெய்த வீரமாமுனிவரென்பவர் எதிர்ப்பட்டு ஏசுமதமாகிய தங்கொள்கையை நாட்டுதற் பொருட்டுத் தருக்கஞ்செய்ய; உடனே அக்கொள்கையைமறுத்து, ஏசுமத நிராகரணமெனப் பெயரிய ஓர்நூலை அருளிச்செய்து, ஒவ்வோர் தலங்களையும் இரண்டு வெண்பாக்களாற் றோத்திரஞ்செய்து முடித்து, அதன்பின் கலம்பகமென்னும் ஓர் பிரபந்தத்தை இயற்றிக்கொண்டுவந்து, ஞானாசாரியரைத் தரிசித்து, அந்நூலை சந்நிதானத்திலரங்கேற்றி, உடன்வசித்தனர் ஒரு நாள் சாயங்கால அநுட்டான முடித்துக்கொண்டு, ஞானாசாரியரும் தாமும் ஏகாந்தமாயிருந்து, தமது சடஸ்தல இலிங்கவனுபவத்தையும் ஞானவிசேஷ சமரசபாவத்தையும் ஆராய்ந்து, இன்புறும்பொழுது, எதிரொழுந்த சந்திரோதயத்தைக் கண்டு

கடன்முரசமார்ப்பக்கதிர்க்கயிற்றூலேறி
யடைமதிவிண்கழைநின்றாடக்—கொடைமருவு
மெங்கள்சிவஞானவேந்தலிறைத்தமணி
தங்கியவேதாரகைகடாம்.

என்னும் வெண்பாவை அருளிச்செய்து, பின்னுமொருநாள் தனிமையாய்ச் சமுத்திரதீரத்தையடைந்து அங்குள்ள நறுமணற் பரப்பில் தாமெழுதிய நன்னெறிவெண்பா நாற்பதையும் தம்பின்னோராகிய கருணைப்பிரகாச சுவாமிகளுக்கு எழுதிவரும்படி, கட்டளையிட்டு, ஞானாசாரியரிடத்தே விடைபெற்றுக்கொண்டு நல்லாற்றூரையடைந்து, அவ்வாசிரியர் திருமடத்தில்வீற்றிருந்தார்.

இவரிடத்து விடைபெற்றுச்சென்ற கருணைப்பிரகாச சுவாமிகள் இஷ்டலிங்க வகவல் பாடிமுடித்து, சீகாளத்திபுராணத்தைப் பாடத்தொடங்கி சீகாளத்திச் சருக்கம்வரையும் தமிழில் மொழிபெயர்த்தருளி, திருவெங்கைமாநகரத்தில் பதினெட்டாம் வயதில் சிவலிங்கவைக்கியமாயினார். அதனையறிந்த சிவப்பிரகாசசுவாமிகள் அவ்விடத்தேசென்று,

முன்னேமொருதமிழ்ப்புலவன்றனையுண்டுகெண்டசுவைமுதிர்ச்சியாலே, தன்னியலைமுழுதுமுணாத்தமையாமுன்னினைக்கவர்ந்துதடங்காளத்தி, மன்னவனுண்டானெனதுமாதவத்தின்வலிமைமண்ணின்மீதே, யென்னுடன்வந்தவதரித்தவிளங்கருணைப்பிரகாசனென்னுங்கோவே.

என்னும் செய்யுளைப் பாடிநிற்க, வேலையசுவாமிகள்,

ஆண்டதனுலெனையொவ்வாய்வித்தையினிற்றமையனினு மதிகமென்றே, பூண்டவுலகதனினுள்ளோர்புகல்வதுகேட்டிருந்துமென்னபுதுமைதானே, காண்டகுகண்மணியேநல்லிளங்கருணைப்பிரகாசக்காளாய்நீதான், மாண்டனையென்றறிந்திருந்துமுயிர்தரித்தேன்யானுமிகுவன்னெஞ்சேனே.

என்னும் செய்யுளைப்பாடித் துக்கித்துக்கொண்டு, சுவாமிகளைப் பிரியலாற்றாது வருந்தி நின்றனர். அவரை ஒருவாறுதேற்றி நிறுத்திவிட்டு, தாம் நல்லாற்றூரையடைந்து, திருமடத்திலிருந்துகொண்டு, சிவநாமமகிமையும், இஷ்டலிங்கப்பெருமான்மீது அபிஷேகமாலையும் நெடுங்கழிநெடிலும், குறுங்கழிநெடிலும், நிரஞ்சனமாலையும், கைத்தலமாலையும், சீகாளத்திபுராணத்தில் கண்ணப்பச்சருக்கமும், நக்கீரச்சருக்கமும் செய்தருளி, சிவாநுபவச் செல்வராய்ச் சிலகாலம்வாழ்ந்திருந்து, முப்பத்திரண்டாம்வயதில், கன்னிமதியில், பௌர்ணிமைத்திதியில், சச்சிதானந்தப் பிழம்பாகிய பரசிவலிங்கத்திற் கலந்தருளினார்.

அதனையறிந்த வேலையசுவாமிகள் அவ்விடத்தையடைந்து

அல்லிமலர்ப்பண்ணவனுமாராய்ந்தறிகவிதை
சொல்லுமிருவரிடைத்தோன்றியயான்—முல்லை
யரும்பிற்பொலியுமணிமுறுவனல்லாய்
கரும்பிற்கணுநிகர்த்தேன்காண்.

என்னும்வெண்பாவைப்பாடி அவ்விடப்படாத அருந்துயர்க் கடலின்மூழ்கி, ஒருவாறுதெளிந்து சிவப்பிரகாசசுவாமிகளது சமாதிதரிசனஞ்செய்துகொண்டு, அவ்விடத்தி னின்றுநீங்கி, நல்லூர்ப் புராணம்,இஷ்டலிங்ககைத்தலமாலை,கும்பகோணச் சாரங்கதேவர் சரித்திரமாகிய வீரசிங்காதனபுராணம், குகைநமசிவாயசுவாமிகள் சரித்திரமாகிய நமசிவாயலீலை, உபமன்னியமகாமுனிவரால் திருவடி தீக்ஷைசெய்யப்பெற்ற கிருஷ்ண சரித்திரமாகிய பாரிசாதலீலை, மயிலத்திரட்டைமணிமாலை, மயிலத்துலா என்னும் பிரபந்தங்களைச் செய்தருளி, சீகாளத்திபுராணத்தையுமுடித்து, பெருமத்தூர் மடத்தில், எழுபத்திரண்டாம் வயதில், சிவலிங்க ஐக்கியமாயினர்.

இம்மூவர் சரித்திரச் சுருக்கம்,

முற்றுப் பெற்றது.

உ

சிவமயம்

இம்மூவருளிச்செய்தநூல்களின் பெயர்.

சிவப்பிரகாச சுவாமிகள்
அருளிச்செய்தன.

ோணசைலமாலை
ிருச்செந்திலந்தாதி
திருவெங்கைக்கோவை
திருவெங்கைக்கலம்பகம்
திருவெங்கையுலா
திருவெங்கையலங்காரம்
ிவப்பிரகாசவிகாசம்
ருக்கபரிபாஷை
தமணிமாலை
ால்வர்நான்மணிமாலை
ாலாட்டு
ெஞ்சுவிடுதூது
ேதாந்தசூடாமணி
ித்தாந்தசிகாமணி
ிரபுலிங்கலீலை [ள்ளைத்தமிழ்
ிவஞானபாலையசுவாமிகள் பி
திருப்பள்ளியெழுச்சி
திருவிற்கோலபுராணம்
பழமலையந்தாதி
ிக்ஷாடனநவமணிமாலை
ொச்சகக்கலிப்பா
பெரியநாயகியம்மை விருத்தம்
பெரியநாயகியம்மைகலித்து
றை
சுமதநிராகரணம்

க்ஷேத்திரவெண்பா
கலம்பகம்
நன்னெறி
சிவநாமமகிமை
அபிஷேகமாலை
நெடுங்கழிநெடில்
குறுங்கழிநெடில்
நிரஞ்சனமாலை
கைத்தலமாலை

வேலையசுவாமிகள்
அருளிச்செய்தன.

நல்லூர்ப்புராணம்
இஷ்டலிங்கக்கைத்தலமாலை
வீரசிங்காதனபுராணம்
குகைநமசிவாயலீலை
பாரிசாதலீலை
மயிலத்திரட்டைமணிமாலை
மயிலத்துலா

கருணைப்பிரகாசசுவாமிகள்
அருளிச்செய்தன.
இஷ்டலிங்கஅகவல்

இம்மூவராலும்
அருளிச்செய்யப்பட்டது.
சீகாளத்தி புராணம்.

ஆ நூல்கள் (௪௨).

இச்சரித்திரச் சுருக்கத்துள் இவர்கள் சமையுசிதமாய்ச் சொல்லப்பட்ட கவிகள் (௰௨).

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கதியின் அட்டவணை.

ஆக கதி உ௫-க்கு திருவிருத்தம் ககூ௫அ.

சிவமயம்.

பிரபுலிங்கலீலைமூலம்.

காப்பு-விருத்தம்.

சுரர்குலாதிபன்றூய்மலர்நந்தனம்
பெருகவார்கடற்பெய்தவயிற்றினேன்
கரகநீராக்கவிழ்த்தமதகரி
சரணநாளுந்தலைக்கணியாக்குவாம்.

முதலாவது

துதிகதி.

சிவபெருமான்.

பாய்நெடுங்கோட்டுறுபசுந்தேன்கைகான்முடங்குபொறியிலி
வாயொழுகிற்றெனவுலகமளந்தமாலுநான்முகனுந் [தன்
வாயென்நின்றேத்தெடுப்பத்தானேயுவந்தெங்கரதலத்தின்
வாவமர்ந்தமாமணியைத்தொழுதுவினைக்குவிடைகொடுப்
ம். (க)

உமாதேவியார்.

திபகவன்றனதூடறணிப்பான்பணியவவ்விறைவன்
தமிறைஞ்சுமதற்குநெற்றிப்பகையுமல்குற்பகையுமாஞ்
மதியுமரவும்விழுஞ்செயற்குமுவகைசெயாமலலை
துபணியுமதற்குமனமகிழுமுமையைவணங்குவாம். (உ)

விநாயகர்.

ரனெடுந்துவலைக்குமொருகரும்பையொடித்துமலர்சிதறி
ரியடுத்தவளிமாலைகுலையத்துரந்துரபங்தோடி
மனத்துவினைப்பாகர்குறிப்பின்னுழுகிவிளையாடு
மதிச்செஞ்சடைக்களிநல்யானையிணைத்தாளேத்துவாம். (ங)

சுப்பிரமணியர்.

பாகமொருபெண்குடியிருக்கும்பரமனணியிற்பரித்தமணி
நாகநுழைவுற்றுடல்சுருண்டுகிடந்துநகுவெண்டலைப்புழையி
போகமெல்லத்தலைநீட்டிப்பார்த்துவாங்கப்போகுமொரு [வா
தோகைமயில்வாகனப்பெருமாடுணைத்தாட்கமலந்தொழுதிடு

அல்லமாப்பிரபுதேவர்.

கலையைமதிக்கும்புலவர்தமைச்சித்தர்குழாத்தைக்கடவுளரை
நிலையைமதிக்கும்முனிவரைத்திசைமாமுகனைநினைவிளையாச்
சிலையைமிதுக்குநெடியோனைவிழுங்கியுமிழாத்திறன்மாயை
தலையைமிதிக்குமல்லமன்செங்கமலமலர்த்தாடலைக்கணிவாம்.

வசவேசர்.

வெள்ளவேணிப்பெருந்தகைக்குயான்செய்யடிமைமெய்யாகிற்
கள்ளவேடம்புனைந்திருந்தகள்வனெல்லாங்களங்கமறு
முள்ளமோடுமெய்யடியாராகவுள்ளத்துள்ளுமருள்
வள்ளலாகும்வசவேசன்மலர்த்தாடலையால்வணங்குவாம். (சு

சென்னவசவேசர்

பங்கவளற்றுவழிமாற்றியொருநல்வழியைப்பகர்வார்போற்
றங்கண்மதியிற்பலபிதற்றுஞ்சமயருண்டாகடைநீக்கி
யங்கநிலையிற்றிலிங்கநிலையிற்றென்றருளும்வீரசைவ
சிங்கநிலைத்தவருட்சென்னவசவன்றிருத்தாள்சிரத்தணிவாம்.

மடிவாலமாச்சையர்.

வார்க்குங்குமமென்முலைபாகனடியாரறுவைமாசடித்துத்[யை
தீர்க்குஞ்செயல்போல்விச்சலமன்னவன்றன்சேனைசெய்பிழை
தாக்குங்கரவாள்கொடுசின்னபின்னமாகத்தடிந்திட்டுப்
போக்குங்கருணைமடிவாலமாச்சன்பொன்னங்கழல்போற்றி.

சைவசமயாசாரியர்.

பெண்ணிற்கரசுதானுகவென்புபெருநீற்றறைபிரச
வண்ணக்கமலமலர்ப்பொய்கையாகச்செங்கண்மாழையா
நண்ணச்சிறியநரிகண்முடங்குளையபரியாய்நகர்புகுதப்
பண்ணற்குரியவமுதுறழ்முத்தமிழ்நால்வரையும்பணிகுவாம்.

சிவனடியார்.

பரவைகேள்வன் றிருத்தொண்டத் தொகையுளடியார் பத்தியெ
முருவமாகுநஞ்சோமநாதன்றுதியுளூஞ்சரண [லா
ரவவணியானடியார்கண்மற்றையவர்களனைவருந்தாம்
விரவிநாளுமிருப்பவிடங்கொடுக்குமுள்ளம்விரிந்தன்றே. (௰)

சிறப்புப்பாயிரம்.

வேறு.

தண்ணிலவுபுனைசடிலத்திறைபுகழ்லலமதேவன்சரிதத்தீம்
பால், புண்ணியரஞ்செவிவாயிற்றமிழ்ச்சங்கத்தான்முங்கதுபுக
ட்டினனு, வெண்ணரியபுகழ்மலயத்திருந்தவனோர்வடிவெடுத்
தானென்றுகூறப், பண்ணியன்முத்தமிழ்க்கவிதைச்சிவப்பிரகா
சப்பெரும்பேர்படைத்துளானே. (௰௧)

அவையடக்கம்.

வேறு.

அடலூறுமல்லமனரியசீரொடு
படுதலினயந்துபாராட்டும்பன்முறை
மடணிகுமுலகமென்மொழியைவந்துவர்க்
கடலினுமூழ்குவர்காலமொன்றினே. (௰௨)

படலத்தொகை.

காற்கதிதருமிடர்கடந்துநச்சுனர்
பார்க்கதிமுதலிருபத்தைந்தாங்கதி
மேற்கதிபெறவருள்விளங்குமல்லமன்
சீர்க்கதியிருபதோடைந்துஞ்செப்புவாம். (௰௩)

சம்பந்தம்.

கன்றியவயிரிகள்தீதுங்காதையும்
வன்றுயர்மதனநோய்வளர்க்குமாற்றமும்
புன்றொழிலினர்வறும்பொழுதுபோக்கலு
மன்ற[illegible]ல்லமனமலலீலையே. (௰௪)

அதிகாரிகள்.

புறங்கறைந்யொழுகுசெம்புண்ணிலீயென
வறுங்கதைபுல்லியர்கொள்வர்மாமல
நறுங்களிவண்டினல்லமனெண்காதையைப்
பிறந்துளபயன்பெறும்பெரியர்கொள்வரோ. (௰௫)

பிரயோசனம்.

மயலளற்றானின்றுகோன்மல்குமன்பெனு
மியலெழுத்தெழுதுகோலிங்கலிங்கமாம்
வியனிலத்தளவுகோன்மதிவிளக்கினை
யயர்வறத்தூண்டுகோலமல்லீலையே. (௰௬)

விடயம்.

நன்றிகொளடிகளுண்குறநடந்துபோ
யென்றனிநாவினின்றெழுமிச்செய்யுளான்
வென்றிகொளல்லமன்சீர்த்திமென்பயன்
கன்றலிலன்பராங்கன்றையூட்டுமால். (௰௭)

வேறு.

பரசிவம்பிரமமென்னப்பட்டொருதிரிவுமின்றி
யுணாமனமிறந்துநின்றவொருசிவலிங்கந்தன்னின்
வருமுயர்சதாசிவன்றான்மற்றவன்றனைப்பொருந்து
மருமைகொண்ஞானசத்தியவர்களாற்சிவனுதிப்பன். (௰௮)

சாற்றுமச்சிவனுக்கிச்சாசத்தியவ்விருவரானுந்
தோற்றுவனுருத்திரன்றான்சொல்லியவவற்குச்சத்தி
மாற்றருங்கிரியையென்பர்மற்றவரிருவர்பாலும்
போற்றுறுமரியுதிப்பன்பொறியவன்சத்தியாமால். (௰௯)

அத்திருமாலுமாவுமளிப்பவந்துதிப்பன்வண்டு
மொய்த்திசைமுரலுஞ்செங்கேழ்முளரிவாணவனவற்குச்
சத்திவெண்கமலையன்றோர்தரவருமுலகிற்றோற்ற
நித்தனங்குருகுகேசனினைவுமாத்திரையினுமால். (௨௰)

ஆக்குறுஞ்செயலதொன்றேயயன்றனக்காக்கலோடு
காக்குறுஞ்செயலிரண்டுங்கண்ணனுக்காக்கல்காத்தல்
போக்குதலென்றிம்மூன்றும்புராந்தகற்களித்தவர்க்கு
நீக்கருமிறைமைநல்கிநிற்குவினன்குருகுகேசன். (௨௧)

முதலாவது துதிகதி முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௨௧.

இரண்டாவது.

கைலாசகதி.

—:*:—

வெள்ளிமால்வரையினுச்சிவீற்றிருந்தருளுமுக்கண்
வள்ளலாரொடுசூளுற்றுமதரரிநெடுங்கட்செவ்வாய்ப்
பிள்ளைவாண்மதிநுதற்றெம்பிராட்டியல்லமனைக்காண்பான்
கள்ளமாயையைஞாலத்துவிடுத்தவக்கதியுரைப்பாம். (௧)

இயங்குவநிற்பவானயாவையுங்கலைமாதோடு
முயங்குபுமுன்னமீன்றமுளரிவானவன்வகுத்து
வியன்புவியண்டந்தன்னுள்விதித்தனன்றகுமிடங்கள்
வயங்கெழுமசுரர்நாகர்வானவர்முதலியோர்க்கும். (௨)

நான்முகவண்டந்தன்னுணனிசிறந்தொப்பிகந்த
தூன்முகவிழிகளாற்கண்டும்பர்களுவகைபூப்பத்
தான்மிகுமருளான்மேனிசாற்றியபேராநந்தக்
கூன்முகமதியணிந்தகொற்றவன்கைலைக்குன்றம். (௩)

கொள்ளைவண்டிழிந்துதாதுகுடைந்துமூக்குழவுடைந்து
கள்ளிழிந்தொழுகுசெம்பொற்கடுக்கைவேய்ந்திலகுவேணி
வள்ளல்வண்புகழ்திரண்டவளங்கெழுகைலைக்குன்றில்
வெள்ளிவந்தத்தியாசமாகவேவிளைந்ததம்மா. (௪)

கண்பிசைந்தொருசேயின்னுங்கலுழினுந்தனைக்கொடுப்பன்
மண்பிசைந்துண்டமாயன்மறுத்திடவலியனல்ல
னண்பிசைந்திறைவனுக்கேநாமிடமாவமென்று
பண்பிசைந்தலைதிரண்டபரிசினின்றிடுமக்குன்றம். (௫)

ஒழுகுறுமருவியீட்டமொலியினுனகுவெண்டிங்கள்
பழகுறுமுடற்களங்காற்பாகசாதனன்கூர்ங்கோட்டு
மழகளிறுமிழ்மதத்தான்மலர்மிசைக்கடவுளூர்தி
யழகுறுநடையாலன்றியறிதரப்படாவக்குன்றில். (௬)

விளங்கொளிதுளும்புமந்தவெள்ளியங்கிரியினுச்சி
துளங்கொளிவிரிக்குஞ்செம்பொற்சுடர்மணிச்செய்குன்றொன்று
களங்கறுபராரைத்துய்யகரூப்புரக்குவாலின்மீது
வளங்கெழுசுடரொன்றுற்றுவயங்குதல்போலுமன்றே. (௭)

இனைய திக்கைலவெற்பிலிறையரசிருக்கையொன்றுண்
டனையவ்விதயணியமாட்டாதப்புறம்போயினனென்
றெனையிகழ்பவர்களில்லையிலங்குமம்மண்டபத்தின்
றனிவளமனந்தனுலுஞ்சாற்றிடற்கரிதுமாதோ. (அ)

வேறு.

அன்னமண்டபத்தங்கணனோர்பகன்
மின்னுசெம்மணிவேதிகையொன்றின்மேன்
மன்னுசெங்கதிர்மண்டலத்துற்றன
னென்னவந்தங்கிருந்தனனென்பவே. (கூ)

குழவியாயுடற்கூனிநரைத்ததோர்
விழவுவாண்மதிவேணியின்மேவுறக்
கிழவியாகிக்கிரிக்கோன்மகப்பெறு
மழகுநீர்மக்களர்யிடைவாழ்வுற. (ய)

அங்கியென்னற்கடுப்பமேனேகிய
செங்கணொன்றுதிருநுதல்சேர்தரத்
திங்களென்றுந்தினகரனென்றும்வா
ழங்கண்மல்குமருண்மடைபோன்றுற. (யக)

எண்ணுமன்பரிதயமென்புட்பமே
கண்ணிபோன்றுவார்காதிடைத்தோடுற
நண்ணுமாதுமைநன்னுதற்பொட்டென
வண்ணநீலமணிமிடற்றென்றுற. (யஉ)

நகந்தருங்கொடிகண்களைநாணியே
முகந்திரும்புமுறையிற்றிரும்புமான்
மகிழ்ந்திடங்கதிர்வீரமழுவலிந்
தகுந்தகுந்தகுமென்னத்தயங்குற. (யங)

சொற்றெரிந்தசுடர்மணிக்கங்கண
முற்றிலங்கவொருகருங்கேழலின்
பற்றிருந்தமதாணியிற்பட்டெனப்
புற்றருங்கலையுற்றரைபொற்புற. (யச)

புரத்தைவென்றநகைக்குமென்போதினேன்
சிரத்தைவென்றசெங்கைக்குஞ்சிலைமத
னெரித்தகண்ணிற்குமின்றெனக்கூற்றபேஉத்
தரித்தவீரக்கழலொடுதாளுற. (௰௫)

இருந்தவாதியிடத்திலிருந்தனள்
பரந்தவானும்படியுமுயிர்களு
மொருங்குதோன்றவுதவிக்கருவுநீஇ
வருந்திலாதமணிவயிற்றன்னையே. (௰௬)

இறைவனங்கணெனுமுச்சுடர்களு
முறவுகொண்டவிருளெனுமோதிமே
லறவனென்றநம்மண்ணல்புனைந்தரு
ணறவுமிழ்ந்தநறுமலர்தாழ்ந்திட. (௰௭)

ஏற்றுவார்கொடியெந்தைசடைப்பிறை
யாற்றுள்வீழ்வுற்றிறப்பதற்கெண்ணுறத்
தோற்றமேவுசுடர்த்திருநெற்றியின்
ஞாற்றுமோர்மணிச்சுட்டிநலந்தர. (௰௮)

ஈசனூர்முகமென்னுமுளரியி
லாசைகூருமளிவிழிக்காரருள்
வாசமாமலர்வாய்க்கிளவெண்ணகை
தேசுலாமணியாகச்சிறந்துற. (௰௯)

மாணப்பூண்புனைமற்றையுறுப்பெனப்
பூணுட்பட்டிடாதோலையின்பூணென
யாணர்ச்செம்பொனிலங்கொளியோலைமேற்
காணக்காதெனும்வள்ளைகவின்செய. (௨௰)

ஓங்குவாவுடையும்பனயனரி
தாங்குமாவிதணந்தொழிநாளினும்
வாங்குறுவெழின்மங்கலநாணொளி
தேங்குபூணரசென்னச்சிறந்திட. (௨௧)

அஃவுலாஞ்சடையண்ணலைப்பிள்ளைதான்
பருவமூன்றினிற்பாடவின்பாருரும்
பொருவில்கொங்கைப்புகழெனப்பொங்கொளி
மருவுமாரமணிவடந்தாழ்ந்துற. (௨௨)

பறந்திடாமணிவண்டுபடுமலர்
சிறந்தநீலமலரொடுசேர்பெற
மறந்திடாதுமறைமுடியின்பொரு
ளறைந்துபைங்கிளிமுன்கையமர்ந்திட. (உ௩)

தோலுடைப்பரன்றன்மனையாட்டிதன்
பாலடுத்ததெவ்வாறெனும்பட்டரை
மேலுடுத்துவிளங்கவொண்மேகலை
நூலிடைக்குறுநோய்புரியாதுற. (உ௪)

புத்தனிச்சம்படினும்பொருமையை
யெய்த்துமற்றையிருமணத்தம்மியி
லத்தன்வைத்தவடிக்கமலங்களின்
முத்தரிச்செஞ்சிலம்புமுழங்குற. (உ௫)

இருந்தவாரருளெம்பெருமாட்டிபாற்
குரும்பைநாணுமென்கொங்கைப்பொறையினல்
வருந்துநூற்பகவன்னமருங்குலா
ரரம்பைமாதரளப்பிலரெய்தினர் (உ௬)

வேறு.

முல்லையந்தொடையருந்ததிமுதலெழுமுனிவ
ரில்லறம்புரிதுணைவியராமெழுவரும்போய்
வல்லரும்பெனக்குவிமுலைப்பனிமலைமகளைச்
சொல்லருந்துதிசெய்துவாழ்த்தெடுத்தனர்தொழுது. (உ௭)

அன்னமொன்றறியாமுடிக்கங்கையையறிந்து
துன்னவந்தலமருமெகினங்களின்றொகுதி
யென்னவம்புயத்தொருசதகோடியிந்திரைகண்
முன்னடைந்துவெண்கவரிகளிரட்டினர்முறையால். (உ௮)

அரவுகௌவியகதிரொனப்பட்டசாந்தாற்றி
பரவையல்குல்வெண்முத்தவாணகைகொலைபயில்விற்
புருவமென்மலர்க்குழற்சசிகோடிகள்புகன்று
மருவியம்பிகையருங்குநின்றசைத்தனர்மன்னோ. (உ௯)

எடுத்துவீணைகளுளர்நரம்பிதுமிடறிதுவென்
றடுத்தகேள்வராம்பிரமருழுறிவரிதாகப்
படத்தபாம்பணிபரன்புடைமாதுகீர்பாட்டிற்
றொடுத்துவாலியகலைமடந்தையர்பலர்துதித்தார். (௩௰)

செப்பமைந்ததண் ணுமையிசைதாளமென்சிறுதாட்
ப்பமைந்தவொண்சதிதழீஇச்சுவையபல்காய
முப்பமைந்தவின்கறியெனநடித்தனருழையோ
டாப்பமைந்தகணுருத்திரகணிகையருவந்து. (௯௧)

ரந்தைபாலுமைமுக்குணங்களுமுருவெடுத்து
ந்தமாதர்களருகுநின்றனர்பணிமகிழ
வந்தமாதருட்டமகுணமாதுமையருளாற்
ந்தமாயையென்பெயர்கொடுதருக்கிநின்றனளால். (௯௨)

தெள்ளுவார்திரைக்கங்கையுங்கங்கையுஞ்சிறிய
பிள்ளையாகியமதியமுமதியமும்பெரிது
துள்ளுமோரிளநவ்வியுநவ்வியுந்தொடர்பு
கொள்ளுமாறவணெருங்கினவுருத்திரகுழாங்கள். (௯௩)

சங்கமொன்றுடனென்றுதாக்குறவொளிதழைக்குந்
துங்கநேமியுமன்னவாறுறவலைசுருட்டும்
பொங்குவேலைவந்தெனவரிக்கணங்களற்புதத்த
வெங்கணுயகன்பேரவையிடத்துவந்திறுத்த. (௯௪)

முகங்கணுன்கினுநான்மறைவிதிமுறைமுழங்க
வுகந்துகையிருநான்குநான்குச்சியிற்குவியச்
சகந்தருஞ்செயற்பிரமர்களளப்பிலர்தையல்
பகுந்தமேனியனவையிடைப்புகுந்தனர்பரவி. (௯௫)

அயனுமாயனுமெனிலுயர்ந்தவரொன்பதன்றிக்
கயிலைநாயகனமர்திருவோலக்கங்காண்பா
னயனமாயிரமிலாமையினதிகனுனென்று
வயிரவான்படையிந்திரரொண்ணிலர்வந்தார். (௯௬)

உரகர்சித்தர்கள்வித்தியாதரர்சுரருயர்கிம்
புருடர்மெய்க்கதிர்முதலியகோடிசைபுரப்போர்
நிருதர்மற்றுளார்விழிபிதிர்ந்திடவுடனெருங்கி
வரதனத்திருவோலக்கங்காணியவந்தார். (௯௭)

அழிவுமாக்கமுமுணாயின்றிச்செயும்வலியடைந்தார்
மொழியும்யாக்கையுமனமுநல்லறங்களின்முயன்று
கழியுமாறுமுக்காலமுமுளர்தளைகழன்றோர்
பழியிலாவசிட்டாதிமாமுனிவரர்பரந்தார். (௯௮)

குழவிபால்குடிப்பதுகடல்குடிப்பதுகுழவி
பழகுமாறுணன்மண்ணெடுத்துண்பதுபடைப்பு
முழுதுமோர்தளர்நடைமகச்செயலெனுமுரண்கொள்
வழுவிலாவருட்கண்ங்களெண்ணிகந்தனவந்த. (௩௯)

செருக்கொடுஞ்சிவநிந்தைசெய்வார்க்கிலைதீர்வு
விரிக்கிலென்றுமுன்சிறுவிதிதலையறவெட்டி
யெரிக்குநல்கிநிந்தனைசெயாமறிமுகமியைத்துத்
தருக்கிநின்றவவ்வீரன்வந்தொருபுடைசார்ந்தான். (௪௰)

காதியாயிரமால்களைப்பிழிந்துமாங்கனிபோற்
கோதுவீசினுங்கடல்கவிழ்த்தனையசெங்குருதி
பாதியாயினுநிரம்புறாக்கபாலபாணியனாய்
மாதுபாதியனவையிடைப்புகுந்தனன்வடுகன். (௪௧)

வீரமாதருக்கில்லையென்றுரைப்பதென்விளங்க
வீரமாதெனவறிகிலிரோவெனவிளம்பி
வீரயோகினிவெள்ளமோடமர்பொரவிரும்பும்
வீரகாளியும்புகுந்தனளவையிடைவிரைந்து. (௪௨)

ஊன்றுஞானமோடியர்வயிராகநல்லொழுக்க
மூன்றுகாலெனக்கொண்டரன்முகத்திளமுறுவ
றோன்றுமாறுநின் றாடினன் கதிருடொலைத்தல்
போன்றுமாயையைத்தொலைத்திடுபிருங்கியென்புனிதன்.

படிகொண்மாமுடிக் கங்கணத்திறைபதம்படுமொண்
முடிகள்யாவையும்படுகழனந்தியெம்முதல்வ
னடிகளேந்துகையுறவடித்தொதுக்கியவ்வவையைக்
கடிகொண்மாலையம்பிரம்பொடுதிரிந்தனன்களித்து. (௪௪)

பெய்யுமாமழைமுகிலெனப்பெரியவாய்முழவந்
துய்யமாமதியனையவெண்சுரிமுகச்சங்க
மையவாணனும்பானுகம்பப்பெயரவனுங்
கையும்வாயுமொத்ததிர்த்தனர்செவிகாங்கவிழ்ப்ப. (௪௫)

துதிப்பரோர்சிலர்பாடுவரோர்சிலர்துள்ளிக்
குதிப்பரோர்சிலர்கைகளாற்றேளிணைகொட்டி
யதிர்ப்பரோர்சிலர்நெக்குநெக்குருகிநெஞ்சகமெய்
விதிர்ப்பரோர்சிலராயினரவையிடைமிடைந்தோர். (௪௬)

படைக்கலங்களிெனளியிமையவரொளிபரித்த
தொடைக்கலங்களிெனளியரம்பையர்பணைத்தோளி
னிடைக்கலங்களிெனளியெலாமிருளிறைமிடற்றி
னடைக்கலம்புகநிறைந்தனபரந்தபேரவையில். (சஎ)

கடவுளுக்குந்தேவிக்கும்
(வாக்குவாதம்.)
வேறு.

இன்னணமவையிடையிருந்தவெம்பிரான்
றன்னொடுவினவுமோர்தகைமையுன்னுபு
கன்னலுமமுதமுங்கைப்பவெம்முடை
யன்னைதன்வாய்திறந்தறைதன்மேயினாள். (சஅ)

தலைவநின்னவையிடைச்சார்ந்தவிப்பெரு
நலனுடையவரொலாநணுகிவெம்பவத்
தலைகிலராகியின்படைவரோவலா
னிலையிலரோவிதுநிகழ்த்துவாயென்றாள். (சகூ)

விளங்கிழைநன்றுநின்வினாவென்றெந்தைமண்
ணளந்தவனயன்முதலாயினோருமின்
புளங்கொளுநாமரூபத்தொடொன்றறத்
தளைந்துளகிரியையாற்சார்கிலாரென்றான். (ருo)

வேறு.

னையதேனுமரூபக்கிரியைகளனைத்தும்வெல்ல
னைவுறுசூட்சியொன்றுநீயெனக்குரைத்தியென்னப்
ணிமலைதவஞ்செய்தீன்றபவளவாய்மடந்தைகூற
னையவிழ்கொன்றைவேணிநம்பன்மற்றிதனைச்சொல்வான். ()

பாகபூமியினிற்போகதனுவினாற்பொருந்தலாகா
தகமாமின்பசித்தியியம்புறிற்கருமபூமி
ாகமான்துகொண்டன்றியாதலான்ஞாலத்தெய்தி
யாகமாநெறியினின்றேருண்மைசாதித்துக்கொள்வர். (ருஉ)

ன்றிதுகொழுநன்கூறவிளங்கொடியனையதாயி
னொன்றொருமக்கண்ஞாலத்துவமையின்ஞானசித்தி
ன்றுறவுளார்த்தவல்லகுரவன்யார்நவிறியென்னக்
ன்றணிமதியமொப்பக்குனித்தவன்கூறலுற்றான். (ருகூ)

தொல்லையி லுயர்சுஞ்ஞானி தூய்நிராங்கார னென்போ
னொல்லையி றவங்கள்செய்ய வெமது மெய்வடிவந்தானே
யல்லமனா மமைந்தனுயில் மனையான்றன்னை
வில்லுறழ் நுதலாய்காண்ட னமிகவுனக்கரிய தென்றான். (௫௪

என்றலுமிமையவல்லியெனக் கரிதென்ப தென்கொ
லுன்றனியல்லமன்றனுண்மையை யறியவேண்டி
னின்றவர்தமக்கெலாமு மெளிதெனு நெகிழ்ந் துரைப்ப
வன்றினர்புரமெரித்த வணிநகையாளன்சொல்வான். (௫௫

முனிவுறேல் வறியவுன்றன் மொழியளவல்லன்மாதே
வினைதபுமன்பரன்பால் வேண்டியவடிவனுகி
யனையவர்விழியிற்றோன்றி யருளுவனலமதேவன்
றனதியல்பியாவரானுஞ் சாற்றிடற் கரியதென்றான். (௫௬

மெய்ம்மையிம்மாற்றமாகும் வேறுளார்க்கியான் செய்மாயை
பொய்ம்மலி செயலிற்றப்பிப் போமெனிற் காண்பலென்று
மம்மலைமகடருக்கியறைதலு நின்றனுற்றன்
மைம்மலி குழலாய்காண்கு மென்றிதுவள்ளல்கூறும். (௫௭

இன்னணஞ்சுளியம்பியினி வறிதிருத்தியாயிற்
பொன்னவிர்சுணங்குபூத்த புணர்முலைமடவாய்தோல்வி
நின்னிடைவருமென்றண்ணனிகழ்த்தலுமிமையவல்லி
யென்னுறாதவருதென்று நெடுமொழியிசைத்துப்பின்னர். (

மாயையை-பூதலத்தில்விடுத்தல்

ஆயிடையருகுநின்ற தமோகுணவடிவமாகு
மாயையை விளித்து நீபோய் மண்ணிடையல்லமப்பேர்
நாயகன்றனையறிந்து நணுகுதியென்றுகூறி
யேயினளவள்வணங்கி யிறையதொன்றியம்பலுற்றாள். (௫௮

(மாயைகூறுவது)

அல்லமனியல்பறிந்தங் கணைகுவனழுவுமாயின்
வல்லிதின்வலிந்து பற்றியீர்த்திவண் வருவலென்று
சொல்லினளொருசூள் வேலைசுவறவுண்டிடுவலென்று
புல்லியவெறும்பொன்றாற்றல் புகல்வதுபோலவன்றே. (௬0

(மாயைபூதலத்தில்அடைந்தமை.)

ன்னளவறியாண்மாழ்கித்தண்மதிதவழும்வேணி
ன்னவனவையுணின்றுமொழிந்தவச்சூண்முடிப்பான்
ன்னகமுடிபரித்தபார்மிசைச்செலவைநெஞ்சத்
ன்னினளெய்தினளவ்வொளியிழைமாயைமாதோ (சுக)

இக்கதியில் (உ-வது) பாட்டுமுதல் (சு) பாட்டுகள் திருக்
கலாயச்சிறப்பும் (அ-வது) பாட்டு அரசாட்சிமண்டபச்சிறப்
ம் (கூ-வது) பாட்டு சிவபெருமான் ஆதனத்துற்ற சிறப்பும்
-வது) பாட்டுமுதல் (ரு) பாட்டுகள்சிவபெருமானதுசிறப்பும்
சு-வது) பாட்டு கடவுளிடத்து உமாதேவியாரிருந்தமையும்
எ-வது) பாட்டுமுதல் (கூ) பாட்டுகள் உமாதேவியார் சிறப்பு
(உசு-வது)பாட்டுமுதல் (உஉ) பாட்டுகள் மகாசபைகூடுதற்
றப்பும் பொருள் கொள்க.

இரண்டாவது-கைலாசகதி-முற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-அஉ.

மூன்றுவது

மாயைஉற்பத்திகதி.

பூதலத்தைப்பொருந்துபுமாயையென்
றோதலுற்றவொருபிடிநுண்ணிடை
மாதவத்தர்மனங்கள்கலங்குறச்
சாதமுற்றுவளர்ந்தமைசாற்றுவாம். (க)

(நாட்டுச்சிறப்பு.)

களங்கவெண்மதிநெஞ்சங்கவற்றுமோர்
துளங்குசங்குடைத்தோன்றன்மணத்தணி
வளங்கொண்மண்மகள்மார்பின்மதாணிபோல்
விளங்குமென்பவிளவலதேயமே. (உ)

வாவியாவுமதன்பெருந்தூணிசெய்
யாவுமாரனெடுக்குஞ்சிலையிடங்
காவெலாமவன்காளசாலைகள்
பூவைமார்மனைபோர்க்களமென்பவே. (௩)

பொறைக்கயிற்றிற்புகழையின்சொல்லெனும்
விறற்கயிற்றின்விருந்தைக்குரவர்சொன்
மறைக்கயிற்றின்மனத்தைத்திருவைநல்
லறக்கயிற்றினசைப்பவரெங்குமே. (௪)

வறியனுவன்வடதிசைமன்னவ
னறிவிலாளனனந்தனுமாவனேர்
சிறியனுவன்சிலைமதன்பூம்பொழில்
வெறியுலாவும்விளவலத்தெய்தினே. (௫)

(நகரச்சிறப்பு.)

இணையிலாதவிளையவளம்பல
நணுகிவாழும்விளவலநாட்டிலவ்
வணியினுப்பணமுத்தும்விலையிலா
மணியின்மேவும்வனவசைமாநகர். (௬)

படிக்குளீரப்பலாப்பழுத்தொண்புவி
வெடித்தவாயினனந்தன்மணிவெயி
லடுத்துவானத்தமர்மதியைத்தொடாக்
கடுத்தவேள்குடைக்காம்பெனத்தோன்றுமால். (௭)

நறவவிழ்ந்தநறுமலர்தோறும்வண்
டுறவருந்தியிருலுற்றொடுங்குமா
லறவர்தங்களகந்தொறுமையமுண்
டுறவர்தங்குகைதுன்னுதல்போலவே. (௮)

வாவிச்செங்கமலங்களில்வல்லிருண்
மேவித்துஞ்சிவிடிதருகாலையிற்
காவிற்சென்றுகளிவண்டிலங்குயில்
கூவத்தண்மதுக்கொள்ளைகொண்டுண்ணுமால். (௯)

பெடையொடுற்றுப்பிரிவில்லபங்கிள்ளைகள்
குடியிருக்குங்குளிர்பொழில்வாய்மலர்ப்
பொடியுதிர்க்கிலவேவலளிபோய்வயின்
மடையுடைக்குமதுப்பெருவெள்ளமே. (௧௦)

சேலுலாவித்திரியுநதிப்புனன்
மாவியானைமறையக்கதிர்த்தலைச்
சாலிநீடித்தழைத்துவிளைவயல்
காலினோடிக்கடிதுவிழுமரோ. (௧௧)

வரிக்கயல்செங்கமலம்வரிவளை
யிருக்கையான்மலரம்பிணையேந்தலால்
விரிக்குமஞ்சிறைமென்னடைப்புள்வயல்
செருக்குவின்மதன்செங்கைநிகர்க்குமால். (௧௨)

நளிர்கடற்றுயினுரணன்றன்னுருக்
கொளவளிப்பவர்கையிற்கொடுத்திடும்
வளைபிறக்குமிடமெனவண்புனற்
குளமணைத்துங்குடவளைமொய்க்குமால். (௧௩)

(அகழும் மதிலும்)

வேறு

ழ்ந்தோருயர்வொன்றுமிகவுயர்ந்தோர்தாழ்வொன்றுமறஞ்
ந்தோருணைக்குமூனைகண்டாமதில்சூழ்கிடந்ததொல்லகழி [ச்
ழ்ந்தோரனந்தன்மணிமுடிமேனின்றன்றுயர்ந்துதடவரையை
ந்தோர்வரையினுதிப்பவன்றாட்கீழ்நின்றதுபோய்ச்சூழெயி
). (௧௪)

(நான்குவருணத்தார்.)

ாற்போர்புரிவர்நான்மறையநறங்கமுணர்ந்ததொழுகுலத்
ற்போர்புரிவர்நெடியசிலையிராமனனையவிறல்வேந்தர் [தோர்
ாற்போர்புரிவர்பிறர்பொருளுந்தம்போற்பேணிப்புரிவணிக
ற்போர்புரிவரந்நகரில்வேளாண்குலத்துநெறியினரோ. [ர்

(நகரின்குறைவு)

உடுப்போர்க்குடுக்குந் துகில்களாலுண்போர்க்குண்ணும்பொரு
ள்களாற்,றொடுப்போர்க்கெடுக்குமலர்களாலணிவோர்க்கணியு
ஞ்சுடரிழையா,லடுப்போர்க்கடுக்குமனைகளாற்குறைபாடுடைம
தன்றதுதான்,கொடுப்போர்க்கிரப்பாரில்லாதகுறையொன்றுவ
துகூறுங்கால். (கசு

(யானைகளுங்குதிரைகளும்)

ஈசனளித்தவொருகோட்டியானைக்கியாங்களிணையாயின்
வாசவனைத்தாங்கிருகோட்டியானையெம்மைமானுமெனும்
பாசவுரற்கால்யானையொடுபொண்டிலிழுக்கும்பகடியெரிற்
றேசினிரதப்பரிசிறந்தவென்னும்பரிகடெருவகலா. (கஎ

(நூலாசிரியர்)

மறையுங்கலைகள்பற்பலவுமுழங்குமொலியுமங்கலஞ்செய்
பறையுங்குழலும்யாழுமியம்பொலியுங்கரியும்பரிமாவு
நிறையுந்தெருவினூடுமணித்தேரினொலியுநிறைகடலி
னறையுந்திரையிற்சென்றுவிசும்பமரர்செவியினடைந்திடுமால்

வேயைநகுமென்சுடர்த்தொடியதோண்மாதுமையைவிடை
பேயுமகன்றுவரற்கரியகைலைமலையைப்பிரிந்தெய்தித் [தொண்
தூயமனமுங்கலங்கவருந்தவர்வேள்குவவுத்தோள்வீங்க [
மாயைபிறந்தவனவசைமாநகரின்வளத்தையார்சொல்வார். (

(அந்நகரின்அரசன்சிறப்பு).

வேறு.

இம்மாநகரிற்கரசாகியிருந்துவாழ்வோ
னம்மால்புணருஞ்செயன்மாதரையாகம்வைத்தல்
சும்மாபுகழன்றெனவிந்தையைத்தோளில்வைத்தோன்
கைம்மாறுவேண்டாமழைபோன்மமகாரனென்பான். ()

திறைதானளக்குந்திறல்வேந்தர்க்கரியசீரான்
குறைதானிரக்குமவர்க்கோடிக்குறுகநிற்பா
னிறைதானவெற்புமணிநாகமுநின்றுதாங்கும்
பொறைதானெடுக்குமிகுமாற்றல்பொருந்துதோளான்.

இரப்பார்வரிசேனாரடிஞாலமெளியதன்றிக்
கரப்பார்கரக்கும்பொருளன்றெனவீகைகற்றே
யுரைப்பாருரைக்குமுரையாவும்புகழில்வைத்தோன்
றனைப்பாலுவமையிலையாகத்தருக்கிவாழ்வோன். (உஉ)

அவன்மனைவிசிறப்பு)

அன்னான்மனைவிவணர்வார்குழலையவேற்கண்
மின்னார்மருங்குறளர்ந்தொல்கிமெலியவிம்மிப்
பொன்னார்சுணங்குவிரிபூண்முலைப்பூங்கொம்பன்னா
ளின்னாரமுதமொழிமோகினியென்னும்பேராள். (உ௩)

ஒன்றானநம்பன்மருங்காயிழையுய்த்தமாயை
குன்றாதவாற்றன்முனிவோருளங்குன்றுமாறு
பொன்றாதபொற்பிங்கிவள்பூங்கருப்போந்துபெற்றா
ளென்றாலிவளுக்கிணையாவினியாரைச்சொல்வாம். (உ௪)

(அவ்விருவருமகவுக்காகநோற்றமை.)

வேறு.

இம்மம்காரனுமோகினியென்னு
மைம்மலிமென்குழல்வாள்விழிமாது
மம்மகவின்மையினாரஞரெய்தி
மெய்ம்மெலிநோன்புவிளைத்தனரன்றே. (உ௫)

(மாயைகருவுற்றமை).

முன்னியநோன்புசெய்மோகினிமாதின்
றன்னுத்ரத்துமைதண்ணருளாலே
மன்னியன்மாரன்வலப்புயமாடக்
கன்னிகைமாயைகருப்பமடைந்தாள். (உ௬)

(கருப்பக்குறி).

முத்தணிகொங்கைமுகங்கள்கறுத்தாண்
மெய்த்திருமேனிவிளர்த்துநரம்பு
பைத்தனமீதுபரப்பவிருந்தாள்
பொய்த்துயில்கொண்டுபுளிக்குமுவந்தாள். (உ௭

(கருவுயிர்த்தமை.)

இன்னணமையிருதிங்களிருந்து
பின்னருமோகினிபெண்மகவீன்று
டன்னிகர்கின்றசலஞ்சலமொன்றிங்
கின்னெளிமுத்திணையீன்றதையொத்தே. (உஅ)

(பிறந்துழிவிழாவெடுத்தமை.)

சங்கொடுதண்ணுமைசச்சரிதாளம்
வங்கியம்வெந்துடிவார்முரசங்கண்
மங்கலமங்கைமகப்பெறுநாளி
லங்கசன்வெம்முரசென்னவதிர்ந்த. (உகூ)

இதுவுமது

தூண்டொளிபோன்மகடோன்றவுவப்புற்
றூண்டகைமன்னவனந்தணர்கொள்ளப்
பூண்டுகின்மாமணிபொன்னிலமற்றும்
வேண்டினயாவும்வெறுப்பவளித்தான். (௩0)

(மன்மதன்செயல்.)

வேறு.

இங்கொருமாயையென்னுமெழின்முளைதோன்றலோடும்
பொங்குறுமுவகைநெஞ்சம்பொறுக்கலனாகியெய்யும்
வெங்கணைமழையுந்தூவுமென்மலர்மழையுமொன்று
வெங்கணுமதனவேணின்றிடையறச்சொரிந்தானம்மா. (௩க)

(தவஞ்செய்வோருக்குநேரிட்ட இடையூறு.)

கண்ணகனிலத்தகங்கைக்கரையினுமுழையிடத்தும்
புண்ணியவனத்துமெய்திப்புற்றுமாய்மரமாயுற்றுந்
தண்ணியபுனலிற்றீயிற்சார்ந்துமூண்டுயிறுறந்தும்
புண்ணியதவத்தோர்நெஞ்சம்பதைத்தனமயலின்மூழ்கி. (௩உ

(முனிவர்கள்காரணமாராய்தல்)

ஐம்பெரும்பூதமெல்லாமடுக்கழிந்தொழியும்போதுங்
கம்பமினமதுநெஞ்சங்கலங்கியதென்னைகொல்லோ
வம்புறசெயலீதிங்குவந்தவாறெவ்வாறென்னச்
செம்பொருளுணர்ந்தசீர்சால்செய்தவரிருந்தகாலை. (௩௩)

(துர்வாசர்வந்தமை.)

ளர்ந்துழியுதவுங்கல்விதானெனத்துருவாசப்பேர்
காளுந்தனிமுனிவர்கோமான்குறுகலுமுனிவரெல்லா
ளங்கனிவரநின்றேத்தியுயர்தவிசிடையிருத்தி
ளங்கெழுமலர்கடூவிவந்தனைசெய்துசொல்வார். (கச)

(முனிவர்கள்வினு.)

ன்றுமெம்முள்ளமெல்லாமெழுதியவிளக்குப்போல
ன்றிடுமின்றென்கொல்லோநிலைதடுமாறுநின்ற
தன்றன்முனிருந்தசெய்யசிறுசுடர்போலவைய
ன்றிதையுணருமாறுநவின்றருள்செய்தியென்றார். (கரு)

(அவருத்தரம்.)

ங்கரியொருசூளாற்றன்றமோகுணவடிவமாயை
ங்கையைவிடுப்பவன்னுள்வனவசைநகரிற்பிள்ளைத்
ங்களினுதித்தாளின்றுசெய்தவக்கிழமைபூண்டீ
ங்கணெஞ்சதனலாற்றலுடைந்ததென்றவனுரைத்தான். (கசு)

(அதனை அங்கீகரித்தமை.)

ருந்தவுமுனிநீகூறிற்றுண்மையேயன்றியெங்கள்
பெருந்தவமுயலுநெஞ்சம்பிறழ்தரற்கேதுவில்லை
ருந்துளம்வருந்தியாய்ந்தவெம்மிடையையமெல்லாம்
ரிந்தனவருளானீயெம்பால்வருகையினலென்று. (கஎ)

(அதனைவிரித்துரையென்றல்.)

முனிவரர்துருவாசப்பேர்முனிவர்கோன்றனைவழுத்திப்
னிமலைவல்லியேவப்பட்டெழுந்தின்மாயையென்னும்
வணிதையிவ்வுலகில்வந்தவாறுநீவிரித்தியாங்க
ரினிதுணர்வுறுமாறோதுகென்றலுமவனுரைப்பான். (கஅ)

(அவ்வாறுரைத்தமை.)

யிலையோலக்கத்துற்றகண்ணுதலல்லமன்ற
ரியல்பினையறிதறேற்றுயென்றுமையுடனுரைப்ப
யிலியலறிவலென்றுமாயையைவிளக்கைக்காண்பான்
யிலிருளினைவிடுத்தபரிசெனவிடுத்தாளன்றே. (கசு)

(அவ்விடையூறுநீக்குமாறுகூறினமை.)

காரணமிதுவேயெங்கோன்கைலையைவிடுத்துமாயை
தாரணிதனில்வரற்குத்தக்கவம்மாயையென்னு
மாரணவிடங்கலந்தயக்கமல்லமனென்றிட்ட
பேரணிகலுழன்றன்னைநினைந்திடிற்பெயருமன்றே. (சO

(இதுவுமது.)

பிணிதபவேண்டில்வாழ்நாள்பெரிதுறவேண்டிற்செல்வ
மணிதரவேண்டிற்கல்வியறிதரவேண்டில்வானம்
பணிதரவேண்டின்முத்திப்பயன்பெறவேண்டிலென்று
மிணையறுமல்லமப்பேரொந்தையைநினைப்பரொன்று. (சக

(இதுவுமது.)

புகன்றவருளத்திற்றுன்பம்போக்குபுதுருவாசன்ற
னகன்றுதன்னிடத்தடைந்தானன்றதொட்டருந்தவத்தோர்
மகிழ்ந்தருளல்லமன்றன்மலரடிமனசதிற்றாங்கி
யுகந்தவன்புகழ்வாய்வந்தவாறெலாமுரைக்கலுற்றார். (சஉ

(அவ்விடையூறுநீங்கினமை.)

நெஞ்செனுமகலிலன்பாநெய்நிறைத்துள்ளமென்னும்
பஞ்சுறுதிரியினுச்சிபற்றிடவல்லமப்பே
ரஞ்சுடரிலகவேற்றியருந்தவர்மாயையென்னுந்
துஞ்சிருளகன்றிருந்தார்தொல்லைமாதவங்கள்செய்து. (சங

(நூலாசிரியர்கருத்து.)

மந்தரகிரிப்பேர்பெற்றமத்தெறிகடல்போலையர்
சிந்தனைகலங்கிமெல்லத்தெளிந்தமைதெரிந்துாத்தாம்
வந்துமண்பிறந்தவன்றேமாதவர்மனங்கலக்கும்
வெந்திறன்மமகாரன்றன்மகடிறம்விளம்பலுற்றாம். (சச

(தந்தைநாமகரணமுதலியசெய்தமை.)

(வேறு.)

காந்தம்வலியுமிரும்புபோற்கண்கீடன்னேடுறப்பிணித்து
நேர்ந்தமனயோரணுவென்னனியாயமன்றென்றம்மனத்திற்
போந்தவாசைப்பெருங்கடலைப்புகட்டுமகளைக்கண்டுவேந்து
வேந்தன்மாயையெனுநாமம்விளம்பிச்சிறப்புப்பலசெய்தான். ()

மோகினிமகளைவளர்த்தமை.

யைப்பெயர்கொண்மகளைநறுமஞ்சடிமிர்ந்துகணைக்காலி
னயக்கிடத்திநீராட்டியிணைக்கணுங்கிநீருதி [வி
யத்துகிலின்மெய்துடைத்துநெகிழ்மென்முலையோடுறத்தழு
ரயிற்றிவலைகொடுதேய்த்துமண்பொட்டணிந்துநீறிட்டு. ()

ண்ணிற்கமையமையெழுதிக்காற்குச்சதங்கைபொற்றண்டை
ண்ணப்புனைந்துபொன்னாைஞாணுவிற்பூட்டிப்புலியுகிர்சேர்
ண்ணப்பசும்பொனணிமார்பில்வனைந்துசிறுமென்றொடிசேர்த்
ப்,பெண்ணிற்கரசிதிருநுதற்பொற்பிறைமேற்சுட்டியொன்ற
ரிந்து. (சஎ)

பூாக்கும்பொருளாற்கண்மிச்சில்போக்கியன்பான்முலையூட்டித்
ரக்கும்பவளக்காற்பசும்பொற்றொட்டின்மலியக்கிடத்தியே
ார்க்குஞ்சுவைவானமுதமேபார்வேந்தணியேயென்றுயரந்
ர்க்குங்கரும்பேகண்மணியேதிருவேயென்றுசீராட்டி. (சஅ)

டியனொருசெய்யாளனச்செய்விளையக்கர்க்குஞ்செயல்போலப்
டியில்நல்விவிரும்பினேன்பாடம்போற்றுமதுபோல
வாடிவில்செங்கோன்மனுவேந்தனுலகம்புரக்குமுறைபோலக்
காடியநோன்புசெய்தீன்றகொடியைவளர்த்தாள்மோகினியே

(மாயைவளர்தற்சிறப்பு.)

ள்ளமாயைதன்னெழில்போற்கண்டதில்லையென்னமிக
ள்ளம்வியந்துதலையசைப்பதொப்பவசையுஞ்சுடர்பார்த்து
மள்ளவிரலொன்றனைச்சுவைத்துமிளிர்பூஞ்சதங்கைத்தாளு
தந்து,விள்ளுமலர்வாய்குவித்தழுதுமீளநகைத்துங்கிடக்கு
ால். (ருo)

ாயைகவிழமுகங்கவிழ்ந்தமதனனிருந்தானவளிருப்பப்
போயசிலையொன்றெடுத்தெழுந்தான்பொன்னுலியன்றபாவை
யழ, மேயவனங்கவேண்டுந்தான்வேந்தன்பயந்தமகணடப்பத்
ாயதவஞ்செய்தைந்தவித்ததுறவினோர்பாலோடினான். (ருக)

குழலும்யாழுமினியவெனக்கூறுவண்ணமென்கனிவாய்
மழலைமொழிந்துமுடற்கின்பமருவவோடிமேல்விழுந்தும்
விழையுமமிழ்தின்மிகவினிமைவிளையநுகருஞ்சுவையடிசில்,
செழியசிறுகையாலளைந்துஞ்செய்தாண்மோகமீன்றோனை.

பரவுபெருஞ்சீருல்லமனைப்பற்றவந்தமதியாற்றன்
னுருவநிழலைப்பற்றநினைந்தோடியோடிக்கலுழ்ந்திடுவாள்
பொருவின்மதியமேன்முனிந்துபொங்குமழலைவீசாமன்
மருவியுறவுகொள்வாள்போல்வாவாவென்னவழைத்திடுவாள்.

(பெதும்பைப்பருவமடைந்தமை.)

மாதிப்பரிசுதந்தைதாய்மகிழவளர்வுற்றரசிருந்த
நீதிக்கிழவனிறப்பவவனெறிசேரிளஞ்சேயவன்றவிசின்
மீதுற்றதுபோன்முன்முளைத்தவெண்பல்விழவேறெயிறுதிப்பப்
பேதைப்பருவங்கடந்துமேற்பெதும்பைப்பருவநண்ணினாள்.

(அப்பருவத்தின்சிறப்பு.)

செய்யவல்லகம்மியன்செய்சிங்கஞ்சுமந்தமணியணைமேற்
பையவந்துமணிமௌலிப்பார்வேந்திருக்கும்பரிசுபோல்
வெய்யகுதம்பைவளர்த்தகலவிழுநீர்வள்ளைக்காதினிடைத்
துய்யபசும்பொன்மணிகுயின்றதுணைத்தோடமையுத்தோன்றி
னாள். (௫௫)

(அப்பருவத்தின்வளர்ச்சி.)

மட்டுக்கணைவேளரணைவளர்த்தகுழற்காடலர்விரவிக்
கட்டுற்றதுநம்பரன்களத்திற்கடுவும்விழிகள்சிறிதுற்ற
முட்டித்துறவாம்பறவைமயன்முடியிற்படுதன்மெல்லமறைந்
தெட்டிப்பார்ப்பவெனமுகங்கொண்டெழுந்தமார்பினிளமுலை
கள். (௫௬)

அன்னநடையுமன்னமிலாவையர்நடையுந்தளர்வெய்தக்
கன்னிநடக்குநடைகற்றாள்கரும்புகசக்குமொழிபெற்றாண்
மன்னுமலர்வீழ்சுரும்பனையமைந்தர்பார்வைக்குறிப்புணர்ந்தா
டன்னையரியளெனவறிந்துதானேமனத்திற்றருக்குற்றாள். ( )

இந்தக்கன்னிமதிமுழுநோக்கெய்திச்செவ்வாய்வலியடைந்து
சந்தச்சிங்கந்தனையடுத்ததக்கவரவின்வலிசார்ந்து
முந்தைக்கொடிமீனத்தலைவன்முனிவராகும்பகைவெல்லக்
கந்தப்பகழிபலவேழக்கருப்புச்சிலையிற்றொடுத்தனனால். (௫அ)

(மங்கைப்பருவ்மடைந்தமை)

கமாகப்பொங்கியெழும்பதமேபோலப்பொங்குமெழின்
ாகமாயைதன்பருவமுன்னிமுடிவேந்தயனுமா
குமாடமொன்றுபுரிந்ததன்கட்கல்விபற்பலவும்
ாகுமாதர்பலர்சூழப்போற்றியிருப்பச்செய்தனனல். (௫௯)

(பொழுதுபோக்கல்.)

வேறு.

வாய்த்துளவம்மணிமாடநண்ணுபு
பாத்தொடைபற்பலபயின்றுந்தந்திரி
நாத்தனியாழைமாணுக்கனென்றுதான்
பேர்த்துளவிரல்களாற்பேசுவித்துமே. (௬0)

அங்கொருமடவரலதிர்ப்பத்தண்ணுமை
மங்கையர்சிலரிசைமரபிற்பாடுறக்
கொங்கவிழ்மலரளிகுமுறத்தென்றலாற்
பைங்கொடியசைதல்போற்பாடியாடியும். (௬௧)

வருமுலையிறைக்கிணையாகவந்துறக்
கரமெனுமேவலன்புடைக்குங்காட்சிபோல்
வினைமவுரோதிமேன்மிஞ்றினைந்தெழப்
பருமணிகுயின்றமென்பந்தடித்துமே. (௬௨)

பூந்தொடைவார்குழல்புனைந்துநல்விரைச்
சாந்தமுநானமுந்தயங்கப்பூசியு
மேந்திழைபலவுறுப்பிசையத்தாங்கியு
மாந்துறுசுவைபலவகையமாந்தியும். (௬௩)

தீங்கனிபாலொடுசெம்பொற்பஞ்சரந்
தாங்குறுபைங்கிளியூட்டித்தன்மொழி
யாங்கதுபயில்வுறவளித்துங்கற்பகப்
பூங்கொடியனையவள்பொழுதுபோக்குநாள். (௬௪)

(அரசனும்ஆசிரியனுமணத்தலைவனைத்தேர்தல்.)

தென்னவன்செம்பியன்சேரன்கொங்கண
மன்னவன்மாளுவன்மகதநாட்டிறை
யென்னுமிங்கிவர்தமுள்யாவர்கண்ணதோ
கன்னிதன்மணவினைக்கெனென்றுன்னியே. (௬௫)

ஆய்ந்திருந்தனன்மமகாரனையிடைப்
பொந்தனனவன்குருவாகப்போற்றுறுஞ்
சாந்தவாங்காரனுந்தகுதிப்பேரினேன்
வேந்தனங்கெதிர்கொளீஇவிதியிற்றாழ்ந்தனன். (௬௬)

மன்னவன்வந்தனைமரபிற்கொண்டவன்
கன்னிதன்னெழினலங்காணப்போயினா
னன்னவளெதிர்நடந்தாரியன்றனைச்
சென்னியின்வணங்குபுசிறப்புச்செய்தனள். (௬௭)

மாந்தளிராலிலைவ்யங்குகோங்கரும்
பேந்தெழின்மனைமலரெய்தியற்புதப்
பூந்துணர்வல்லிநேர்பொன்னைக்கண்டவ
னோர்ந்தனன்காரணமாதென்றுன்னியே. (௬௮)

மாதுருவுறுகுறிமதித்தறிந்தவ
னாதரவொடுமுடியரசைநோக்கிநின்
கோதையையார்கொலோதோளிற்கொள்பவ
ரோதுகவென்றலுமுனிரத்தன்மேயினான். (௬௯)

உணர்ந்திலனடியனேனொருநங்கோதைதன்
மணந்தனக்குரியவர்மனிதர்வானவர்
கணங்களொருவரைக்கருத்திற்றேர்ந்துநீ
யிணங்குறவெனக்கிவணியம்புகென்றனன். (௭௰)

(தலைவனைத்தெளிதல்)

கொங்கவிழ்தொடையினாய்கூன்கொக்கன்றாவான்
கங்கையையடைவதுகடவுளன்னமே
மங்கையையணைபவர்மனிதரல்லர்நஞ்
சங்கரனேயிவடலைவனென்றனன். (௭௧)

(ஆசிரியன்அரசன்ஐயமகற்றல்)

மாலுநான்முகனுநாடரியவள்ளலிவ்
வேலவார்குழலினாட்கெளியனாவென
வாலமார்மிடற்றினனன்பர்வேண்டிய
கோலமாய்நணுகுமீதுண்மைகூற்றென்றான். (௭௨)

(உபதேசஞ்செய்தமை.)

இன்னணமரசனேடியம்பிமாயையாங்
கன்னியைவிளித்தவள்கருத்திணங்குறச்
செந்நிலைதனையுபதேசித்தேகினன்
றன்னிகர்குருபரன்றனதிடத்தரோ. (எ௩)

(நூலாசிரியர்)

குருவருண்மொழிநெறிகொண்டுமாயைதான்
வரவனவசைநகர்மதுகைநாதனைப்
பரவினளருச்சனைபயின்றுபூசனைக்
கருவிகண்முழுவதுங்கைப்பிடித்தரோ. (எ௪)

மூன்றாவது மாயையுற்பத்திகதி முற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-௧௫௬.

நான்காவது

மாயைபூசைகதி.

பதிவைமேவுறுங்காதனெஞ்சகத்தினுட்பதித்து
மதுகைநாதனைவரன்முறைவரிவிழிமாயை
யுதயகாலையிற்பூசைசெய்நாள்களுளொருநாள்
விதியையோதுவன்குவிமனத்தவர்கொளவிரித்து. (௧)

(சூரியனுதித்தல்.)

விதுவைச்சேய்மையிற்கண்டலர்குவளைகண்மேவிய
முதிர்விற்பூணிளமுலையெழின்மாயைதன்முகமா
மதியைச்சேர்தருவரிக்கருங்குவளைகண்மலரக்
குதிரைத்தேரவனெழுந்தனன்குணதிசைக்குன்றில். (௨)

(நீராடல்)

அனையகாலையிலன்னமென்றாவிபெய்யணைமேற்
பிறந்தபயன்பெறவுலகரெனைக்கண்டுகொண்டுமெனம்பிறழ்தலின்றிச், சிறந்தசிவலிங்கமலர்க்கரங்கொண்டுபூசனைதாஞ்செய்யவேண்டி, நிறைந்தவெனதுருவாகுமிக்குறிகைக்கொண்டனன்யானீங்காதென்று, மறிந்துதெளிகுதிமனமென்றருள்செய்தெங்குருதேவனறையலுற்றான். (சுo)

போதகனாகியகுரவனெஞ்ஞான்றுநற்கருமம்புரிகவென்று [வேவேதமுதலாகியநூன்முழுதுமொருங்கொருவந்தம்விதித்தலா
சாதகனாகியபருவமாணைக்கன்பாசவலிதணிக்கவல்லான், [தால்.
மேதினிமேலுடலொடுநற்செயல்விடுவதன்றியிடைவிடலாகா

ான்றுதனதியலுணர்த்தியுடம்புநானென்றிருந்தவியல்புபோல,
நின்றவெனையுணர்ந்துநீசோகம்பாவனைகொண்டுநிற்மையாயிற்,
றொன்றலுறுவிடங்களுழன்றனைநினைப்பப்போதல்போற்போம
விச்சை, நன்றறிதியெனவறிவித்தனனெங்கோன்கோரக்கநாத
ன்றன்னை, (சஉ)

(கோரக்கர்அல்லமன்வடிவடைந்தமை)

ஞானகுருபரனருளாற்றனக்குரைத்தமொழிப்பொருளைநன்
கறிந்திட், டூனவடிவென்பதுவிட்டுண்மையலாவனைத்தையுநீத்
துண்மைகண்டு, தானதனையடைந்துதானதுவென்னுமருளகன்
று தானேயாகி,வானவருமறிவரியபெரும்புகழ்க்கோரக்கனவண்
மன்னினனால். (சங)

பத்தொன்பதாவது-கோரக்கர்கதி-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கூசரு.

இருபதாவது

முனிவர்கதி.

பணிவளைமகளொடுபவளவார்சடைத்
தனிவரையமர்திருச்சயிலநீங்கியே
துனிவரையல்லமன்சுருதிமெய்ப்பொருண்
முனிவரையுணர்த்தியமுறைமைகூறுவாம். (க)

அருந்தவமுயன்றகோரக்கற்கம்முறை
விரிந்தறிவுருவமாமெய்ம்மைத்தன்மையைப்
பரிந்தருளமலனப்பாலுமுத்தரம்
பொருந்துனர்தமக்கருள்புரியப்போயினன். (உ)

(அல்லமன்இயற்கைக்குணம்).

நல்லனதீயனநாடுறுதுகொள்
ளல்லழலெனவருண்மழையெனப்படு
மல்லமனெதிர்ந்தவரறமுளாரற
மில்லவரொனதறிவியற்றினனரோ. (ங)

யாவருந்தனதருட்கேற்றுளாரெனப்
பாவவன்றளையறப்பரிந்துநன்னெறி
மேவவந்தருள்புரிவிமலனுயிடை
மாவழங்குறுமொருவனத்திற்போயினன். (ச)

(அல்லமன் ஓர்வேடனுக்குமனமிரங்கல்).

அக்கொடுவனத்தெதிரன்பென்கின்றதுட்
புக்கறிகிலாவொருபுளினன்கூன்புறக்
கொக்கெனநாடொறுங்கொலைகுறித்தவன்
கைக்கொடுமரமொடுகெடிதுதோன்றினன். (ரு)

அன்பனுய்க்கண்ணிடந்தப்பும்வேடனுக்
கின்பமீகுதல்புகழ்க்கேற்றதன்றுநான்
வன்பனுய்த்திரியுமிம்மறவற்காப்பலென்
றென்*பொலாமணிமனமிரங்கிற்றென்பவே. (சு)

(அல்லமன்வேடனைநோக்கஅவன்வணங்கினமை).

நல்லறிவவனுளநடுதற்கொப்பிலா
வல்லமன்வினையறவருட்கண்வைத்தனன்
கொல்லையின்விதையிடக்கொழுப்புகாமுளி
புல்லெரிவுறவழற்போகட்டென்னவே. (எ)

மேவுதீவினையெலாம்விளிந்துதூயனுய்ப்
பாவியேனுய்வகைபகர்தியென்றனன்
மாவலால்வழங்குறுவனத்தில்வேட்டுவன்
யாவர்தாமிறையருளெய்தினுய்ந்திடார். (அ)

(வேடனுக்குத்துன்பமொழிந்துநன்னெறியுணர்த்தல்)

அறிவெனும்வேலினலைம்புலன்களா
மறியினமருளெனுமலையைத்தப்புறு
தெறிகுவையெனினினக்கில்லைத்துன்பெனு
நெறியினைமருவறநிமலன்கூறினன்.

அறிவொடுமனஞ்சிலையம்பதாகநான்
குறியெனவெய்வையேற்குமரநின்றனைப்
பொறிமதிலிலங்கைமுன்புரந்துளான்றலை
பறிபடவெய்தவன்பணிபுமென்றுமே, (ய)

(நூலாசிரியர்)

இப்பரிசெலாழ்வலியெயினனுய்வகை
செப்பிநன்னிலையருள்செய்திருத்தியே
யப்புறமருளுடையமலன்மேலப்பொழு
தொப்பறுதவவனமொன்றுதோன்றிற்றே. (கக)

* பொலாமணி = தூ... ...மணி.

(வனச்சிறப்பு)

கோடமைகரிகளுங்கொடுமடங்கலும்
பாடமைபகைதவிர்பரிசினானதற்
காடரவொடுமதியமர்பிரான்சடைக்
காடலதுவமையாங்கண்டதில்லையே. (கஉ)

பெயர்க்குறுகால்கள்கையாகப்பெற்றவு
முயிர்க்குறுநாசிகையாகவுள்ளவு
மயக்கறுதீயினைவளர்த்துவான்புனல்
பயக்குறுமுனிவரர்பணிகள்செய்யுமால். (கங)

மறைபலவோதுநர்மகம்வளர்க்குநர்
கறைமிடற்றுடையநங்கடவுட்பூசனை
முறைவழிபுரிகுநர்மூச்சவித்தொரு
தறியெனவசைவறவிருக்குந்தன்மையார். (கச)

வேறு.

ஆயிருக்குமருந்தவர்தங்கள்பாற்
போயிவர்க்குறுபோதனையாற்பவ
நோயகற்றுவலென்றுநுவன்றனன்
றூயனெக்கொருதானெனுமல்லமன். (கரு)

(அல்லமன்முனிவர்களுக்குப்போதித்தல்.)

நோற்றுநோன்புடனொந்துவருந்துவீ
ராற்றுநீர்மகமாதிவினையினான்
மாற்றுமாயைமலஞ்செறுவிற்படு
சேற்றினாற்கழுஞ்சேறுநிகர்க்குமால். (கசு)

ஞானங்கொண்டுநண்ணுகுஞ்சிவபத
மூனங்கொண்டகருமத்துறுவது
வானங்கொண்டுவளர்த்தல்புகையநு
மானங்கொண்டுவளர்த்தலையொக்குமால். (கஎ)

குடுமியங்கிரியொப்பக்குவித்தபுற்
சுடுதல்கொண்டுபிறவிசுடப்படா
தப்புலன்களறிவெனுமங்கியிற்
சுடுதல்கொண்டுபிறவிசுடப்படும். (கஅ)

போதமாகும்புனிதத்தழலினுட்
பேதபாவனைப்பேரவிபெய்வனே
லாதி§சோவுடைமாசியவனென
வேதம்யாவும்விளங்கவிளம்புமே. (ககூ)

---

§சோவுடைமாசி-சோமாசிமாறநாயனார்.

மறையினுள்ளகருமஞ்§மணவினை
வறியர்கொள்ளுதல்போலமதியறுஞ்
சிறியர்கொள்வர்தெளிதத்துவமசி
யறிஞர்கொள்வரணிகொளுஞ்செல்வர்போல். (உ௦)

(முனிவர்கள் அல்லமனைத்தொழுதுவணங்குதல்.)

என்றுகூறவிருந்தவரன்பொடு
நின்றுஞானநெடுந்தகைதாண்மிசை
யின்றுநீவரவெத்தவஞ்செய்தன
மன்றயாமெனவாழ்த்திவணங்கினர். (உக)

மாயைதோன்றியஞான்றுமனத்தினை
மூயமோகமுடிந்திடச்செம்மலர்
வாயினூற்றுருவாசன்சொலப்படுந்
தூயனுமிவனென்றுதுதித்தனர். (உஉ)

(நூலாசிரியர்)

இன்னவாறிங்கிருந்தவரின்புற
மன்னுஞானமறைமொழிகூறியே
தன்னைமேவுந்தலைமைபுரிந்தன
னன்னைபோலுநம்மல்லமதேவனே. (உ௩)

இருபதாவது முனிவரர்கதி முற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-௯௬௯.

இருபத்தோராவது

சூனியசிங்காதனகதி.

அல்லமனையறிதற்கோரறிகருவியாகவுன்னிச்
சொல்லரியவெழுநிலைப்பொற்சூனியசிங்காதனமொன்
றில்லையெனலில்லையெனுமெங்கள்குருவசவேசன்
மல்லலுறவினிதாற்றிவைகுமுறைவகுத்துணாப்பாம். (க)

(வசவேசர்யோகநிலையடைந்தமை.)

ஒக்குமனம்வீட்டினெறிக்கொருதுணையாகும்புறத்து
நடக்குமனநிரயவழிநடப்பதற்குத்துணையாமென்
றிடக்கர்மனமடக்கும்வகையெம்பிரானியம்பியவா
றடக்கமனமுறநெறியினருணந்திதலைப்பட்டான். (உ)

§ மனவு சங்குமணி.

ல்லாதுபோமனத்தைக்கால்பிடித்துநிறுத்தியே
ல்லாருமதியமுதம்விருந்திட்டுநட்புறீஇப்
பால்லாதபுலனுகரப்புறத்துநிலேதடுமாறிச்
சல்லாமலுடன்கொண்டுசித்திரமொத்திருந்தனுல். (ரு)
ன்றமனங்கொண்டுதானித்தமாந்தனையுணர்த்த
வன்றுவருஞானகுருவெனவெழுந்துவளர்காத
லான்றுமொழிவறநிற்பவுவப்பதுலகிற்பொருள்வே
ன்றியருணந்திபிரானெந்தைவரவினேநோக்கி. (சு)
(வசவேசர் அல்லமனேயறியுமாறு ஆதனமமைத்தல்.)
வ்வுருவிெனுடுவருமோவெம்பிரான்றெளியகிலேன்
சவ்வியவோர்தவிசமைத்துச்சேர்ந்ததன்மேலிருப்பவனே
வ்வியமிலல்லமனென்றறிவன்யானென்றுதுணிந்
வ்வுலகமுளம்வியப்பவிதுசெய்தானருணந்தி. (எ)
தியாதாரமாதியடுக்கெனப்பன்னிறத்த
சாதியேழ்நிலேகளோங்கச்சூனியபீடமொன்று
பாதினுனுளம்வியப்பப்பொன்மணிபளிங்குகொண்டு
திநான்மறைகள்போற்றுஞ்சைவநாயகன்செய்வித்தான். (சு)
ரணவுபாதியேழ்மேற்கண்டிடுஞானிபோலச்
ரணிநுதலின்மீதுசென்றுகாண்யோகிபோலப்
ரணஞானுனந்தப்போதகனிருப்புக்காண்பா
னரணிநிலேகளேழ்மேனிகழ்வெளித்தவிசமைத்தான். (எ)
(ஆதனத்தின்றேற்றம்)
ளங்கமின்மதியம்போலக்கண்டவர்மனமலர்த்தும்
ளிங்குசெய்நிலேயுள்வந்துபார்ப்பவர்மெய்ந்நிழற்போய்
ளங்குதறன்மேற்றேன்றவெந்தெரிபசும்பொனுற்செய்
ளங்கொளிநிலேயைச்சென்னிசுமத்தல்போற்செய்தவொக்கும்
(ஆதனத்துட்புகுந்தமானிடர்மயக்கிப்புகழ்தல்.)
ருந்தியபளிங்குகொண்டுசெய்தவந்நிலேயின்வாய்தல்
பொருந்துதறெரிகிலாராய்ப்புகுந்துகாண்மனிதரொல்லாங்
ரங்கொடுதடவிக்கண்டுகண்டெரியார்கள்போல
வருந்தியமனமகிழ்ந்துவசவனேவியப்பரன்றே. (அ)
(ஆதனத்தின் அழகைநோக்கித்தேவர்கள்புகழ்தல்.)
னேவினு*லொருவன்செய்தநெஞ்சுளாலயமேயன்றி
வினேயினுலுலகர்செய்துவிளங்கியபணிகடம்மு
னேயதோடுவமையாதலில்லேயென்றும்பரொல்லாந்
னேயலானிகரிலாததவிசினேவியந்துநின்றூர். (கம)

* ஒருவன்-பூசலநாயனுர்

(ஆதனத்தின்பெருமைநோக்கி அடியார்கள்வசவேசனைப்புகழ்தல்)

அம்பராசனமியன்றவதிசயங்கேளாமுக்கட்
டம்பிரானடியாராகத்தனையுளாரெல்லாஞ்சென்று
செம்பொனாலியன்றவந்தச்சீர்கெழுபீடநோக்கி
யெம்பிரான்வசவதேவனிணையடிதொழுதிருந்தார். (கக)

(வசவேசர்ஆதனத்தினியல்புநோக்கிஅல்லமன்
வரவுபார்த்திருத்தல்.)

கரையிதுகல்விக்கென்னக்கற்றவர்பலருமேத்தத்
தரைமிசையமர்ந்திருந்தசாரதாபீடமேபோ
லுரைமனமிறந்ததாமிவ்வொருதனிஞானபீட
மருடருகுருகுகேசனன்றியேறிடுதற்காமோ. (கஉ)

இப்பெரும்பீடமேறியிருந்திடவல்லோனென்றும்
வைப்பெனும்படிமறைந்தெம்மனத்திருப்பதற்குவல்ல
வப்பெருங்கருணைக்குன்றமாகுமல்லமனேயென்று
செப்புறுபரிசிலானுய்ச்சிந்தைசெய்திருந்தானந்தி. (கங)

(நூலாசிரியர்)

கரைபொருகங்கையாற்றிற்கண்ணிவைத்தரசவன்னம்
வருதலைநோக்கிநிற்கும்வாறுபோலிருள்விழுங்கிப்
பெருகொளிவிரிக்குஞானபீடமொன்றமையவாக்கிக்
குருபரன்வரவுநோக்கிக்கொண்டிருந்தனனெங்கோமான். (கச)

(வசவேசனைநோக்கும் அல்லமனை அடியார்கள் கருதுதல்.)

எட்டினைப்புதுநீராற்றிலெதிர்கிழித்தேறவிட்டோன்
பாட்டுடைத்தலைவனன்பர்பலருநம்வசவன்றன்னை
நாட்டமுற்றடையுமாசானமக்குமாமென்றிருந்தார்
வீட்டினுக்கேற்றுசோதிவிருந்திற்குமுதவுறுதோ. (கரு)

இருபத்தோராவது-சூனியசிங்காதனகதிமுற்றிற்று.
ஆக-திருவிருத்தம்-கூஅச.

இருபத்திரண்டாவது
சூனியசிங்காதனத்திலிருந்தகதி.

பள்ளம்புகுபுனல்போனெறிபடருஞ்சிவனடியா
ருள்ளம்புகுமருணந்தியிவ்வுலகோரறியாமற்
கள்ளங்கொளுமனமோடுசெய்யணைமேலொருகருணை
வெள்ளங்கடிதேறுஞ்செயல்விருப்பாலெடுத்துரைப்பாம். (க)

(அல்லமன்வரவுதலுக்குவசவேசர்பரவசமுறுதல்)

ரனுடுறுகயலாடல்செய்செய்ந்நாடுடையுழவ
ரனுடுறுமொருகாவிரியறனுடுறுமுறைபோற்
ரனுடுறுமடியார்வினைபரியத்திரிகுரவன்
ரனுடுறுமுருகும்பரவசவன்புறுவசவன். (உ)

(அல்லமன்வரவுதாழ்ப்பவசவேசர்மனம்வருந்துதல்.)

பொன்றுனமைகதிர்வீசணைபுரிந்திரறுபருவம்
பின்றுயினயான்செய்தொழில்பிள்ளைத்தொழிலாயிற்
றெறந்நாள்வருமெனையாளுடையெம்மானறியேனென்
வன்றுவருதுயரோடுளமுளைந்தான்வினைகளைந்தான். (ங)

(வசவேசர்சென்னவசவேருக்குத்தனதுங்மித்தங்கூறுதல்)

இவ்வாறமர்நாளோர்பகலெமையாளுடைவசவன்
செவ்வாறுசென்மனத்தல்லமதேவன்வரமுன்றிற்
றவ்வாறதுநிகழ்வுற்றவனுர்வந்தனையொருநா
னெவ்வாறுனைசெய்வன்பணியிறையுஞ்சொலவரிதால். (சு

பலமாடினவிழிதோளருள்வசவற்கதிதூரஞ்
செலுமாடவன்வருநாள்விழியிடமாடியசெயல்வாய்
தலமாதுளமெனவேமகிழ்கொண்டன்புநிறைந்து
மலமாயைகடிரக்குஞ்சென்னவசற்கிதுபுகல்வான். (ரு)

வேறு.

நற்குறிபலவுமிற்றைநாணிகழ்கின்றவென்பால்
வற்கலமுனிவர்போற்றும்வசவவந்நிகழ்ச்சியானும்
பிற்பெறுபயன்யாதென்றுபெருந்தகைவினவநின்ற
சிற்பரமுணர்ந்தசென்னவசவதேசிகனுரைப்பான். (சு)

(சென்னவசவேசர்வசவேசருக்குநிமித்தத்தின்பயனுணர்த்தல்)

ஜயவிந்நிமித்தந்தன்றுலல்லமற்காண்பையின்று
மெய்யுறையிதுசாணென்றுவிடுத்தனன்மருகனெங்கள்
கையுறுமமுதனுன்றுன்கருதியபடிவிண்ணப்பஞ்
செய்யவுண்மகிழ்வுபூத்துச்செயல்செய்வார்க்குரைக்கலுற்றுன்.

(அல்லமன்வரவறிந்தவசவேசர்கலியாணபுரியை அலங்கரிக்கச்
செய்தல்)

உடம்பெனும்வனத்தினின்றவுயிரொனுங்கன்னிதன்னைத்
தொடர்ந்திசைமணத்தாற்சேர்ந்ததுணைவனல்லமனின்றெய்து
மடைந்தருள்கல்யாணத்தையணிமினென்றெந்தைகூற
நடந்தனர்நன்றென்றன்றுர்நகரியோர்க்குணர்த்தினுரால். (அ)

(தோரணம்)

அலர்கதிர்ஞாயிறூருமணிநெடுந்தேர்க்கொடிஞ்சி
விலகுறவிதிற்றூக்காமன்மேலளவொருசாணிற்பப்
பலர்புகழ்மணிமாடத்துப்பறக்குமொண்கிளியொழுங்கி
லிலைசெருகியபசும்பூந்தோரணமிசையவார்த்தார். (கூ)

(நிலைத்தேர்-கொடி)

போதகக்குருநழ்ழுருட்புகக்கொடிகட்டனன்றென்
றுதரவொடுமசைத்தாரவிர்கொடிமாடத்தும்பர்
சோதிதன்னிரதமென்றுஞ்சுழலமேனகுதல்போல
வீதியுளாடியோடுவிளங்குறுநிலைத்தேர்செய்தார். (ம)

(பனிநீரால்வீதிதிருத்தல்)

குங்குமநறியசந்தங்குழைத்ததண்பனிநீர்சிந்திப்
பொங்கெழின்மறுகனைத்தும்புதைசெழுஞ்சேறுசெய்தார்
மங்கலமனைமுன்பந்தர்மணப்பந்தருண்மையாகக்
கொங்கவிழிதழ்நறும்பூங்கோதைகடூக்கினூரால். (கக)

(வாழை-கரும்பு-கமுகு)

வயலிடஞ்சேர்ந்துநின்றவாழையுங்கரும்பும்பாளை
யுயரிளங்கமுகுமொன்றோடொன்றுநின்றுசாவித்தாமெல்
லியரருந்தொடைதோள்கண்டமெனுமுறுப்பழகிரக்குஞ்
செயலில்வந்தடைந்தவென்னச்செழுங்கடைத்தலைமுனூர்த்தார்.

(பூரணகும்பம்)

இலையினூற்பொலிந்தவாழைதொடையினுலெய்தும்பேறு
முலையினூற்பெறுவமென்றுமுன்னிவந்திருத்தல்போலக்
கலையினூற்சிறந்தவல்குற்கயற்கணூர்நிறைகுடங்கள்
விலையினூற்சிறந்தசெம்பொன்வேதிகைமீதுவைத்தார். (கரு)

(தீபம்)

மனத்திருளகற்றுநின்றமணிச்சுடர்வரவுபார்ப்பி
நினைத்துவந்திருத்தல்போலநெடுமணிக்கதவவாய்தன்
முனைத்திருவிளக்குவைத்தார்முகிழ்முலைக்கருநெடுங்கட்
டனிச்சிலைநுதற்பூங்கோதைச்சரிகுழற்றளிர்க்கைநல்லார். (கச)

(வசவேசரோடுஅல்லமனைக்காணவந்தமாதர்கள்)

அல்லமகுரவன்றன்னையருணந்தியோடுகாணச்
செல்லுவமென்றுசெம்பொற்சீர்கெழுவிமானத்தோடு
மொல்லையிணிலத்திழிந்தவும்பர்வாழ்மகளிர்போல
வில்லெனுமருங்குன்மாதரிருந்தனர்நிலைத்தேறோறி. (கரு)

(நகரத்தின் அலங்காரமகிமை)

ிருநகரிதனையின்றுதிருந்தவேறலங்கரிப்ப
ிருநலுள்ளனகழித்துநீத்தவையமரர்கோமா
ிருநகரலங்கரித்தற்குரியனவென்னினந்தி
ிருநகரணியின்மிக்கபெருமையார்கூறவல்லார். (கசு)

பசவேசர் அல்லமனைக்காண அரண்மனையினின்றுஞ்செல்லுதல்.

ின்னணமலங்கரித்தவெழின்மணிமறுகினூடு
மன்னவர்மன்னனுய்யமந்திரிக்கிழமைபூண்டோன்
ன்றொருகுரவன்றன்னைத்தானெதிர்கொள்ளவேண்டிப்
பொன்னவிர்கோயினின்றும்புறப்படாப்போதலுற்றான். (களு)

(சென்னவசவையர்.)

பதியுமப்பதியாற்காணும்பசுவுமப்பசுவின்ஞானம்
பொதியு * மைம்பாசந்தானும்பொருளெனவழக்கிற்கூறும்
விதியுமப்பாசம்பொய்யாய்வேறறும்வீடுமோதி
மதிமயக்கறுத்தசென்னவசவனுமருங்குசென்றான். (கஅ)

(மடிவாலமாச்சையர்.)

எம்மடிமாசுமுக்கணிறையவனடிமைபூண்டோர்
தம்மடிமாசுநீக்குந்தன்றொழினெறிவழாத
செம்மடிவாலமாச்சதேவனுமன்புதாயின்
மும்மடியாகுநந்திமுதல்வனோடருகுசென்றான். (கக)

(கிங்கரன்-கின்னரப்பிரமன்.)

சங்கரன்சடையிற்பாம்புந்தவழ்ந்தெதிர்கிடந்தபிள்ளைத்
திங்களுஞ்செய்தவொப்பச்செங்கைமானவசமாகக்
கங்கையுந்திரையடங்கக்கானமுன்பாடியீச
கிங்கரன்றனதுபூங்கர்கின்னரப்பிரமன்சென்றான். (உ0)

(அடியார்பகுப்புகள்.)

தண்டினர்கரகக்கையர்சடையருத்திரளனத்தர்
புண்டரநுதலர்கற்றோய்பூந்துகிலுடையர்நீல
கண்டனையகம்புறத்துங்கண்டவர்வினையினீங்கித்
தொண்டுறுநெறியினின்றோர்சூழ்ந்தனரொண்ணிலாரே. (உக)

---

* ஐம்பாசமாவன-ஆணவம், கன்மம், மாயை, வைந்தவம், திரோத சத்தி.

(வீரர்கள்)

தோள்வலந்துடித்ததின்றசுடரிலைவேற்புணென்று
கோள்வலக்கொள்ளுஞ்சொம்பொற்குன்றெனுமார்பிற்காண்
வேள்வலங்கொண்டநெற்றிவிழியிறையருளாலென்னும் [பே
வாள்வலங்கொண்டசேனைமறவர்வாரிதிபோற்சூழ்ந்தார். (உ

(குதிரைகள்)

எங்கள்வாழ்வலையநந்தியெழுந்தருண்மறுகினூடு
மங்குல்வானிரவிப்புத்தேண்மணிநெடுந்தேர்ப்பைங்கிள்ளை
தங்கள்காற்றூட்குடைந்துதரிப்பரிதாகியோட
வங்கண்மாஞாலமெல்லாமதிர்தரநடந்தவம்மா. (உரு

(யானைகள்)

அரவொடுமெண்சுமக்குமடுகளிறெட்டொடும்போர்
பொரவொருகளிநல்யானைபோதுமென்றெண்ணிலாத
விரவொடுபுரைநிறத்தவீர்ங்கவுட்சிறுகட்டேங்கு
கரவளைவெண்மருப்புக்கடாக்களிறெழுந்தவன்றே. (உச)

(சேனாதிபதிகள்)

ஆனைமேற்கொண்டும்வாவுமாடல்வெம்பரியிவர்ந்துங்
கூனல்வேய்தொடுத்துஞான்றகுச்சுடைச்சிவிகையூர்ந்துஞ்
சேனைகாவலரெண்ணில்லார்சிலைமதன்கோலமென்ன
மானவேன்மன்னர்மன்னன்மந்திரிமருங்குசென்றார். (உரு)

(வெண்சாமரம்)

பலங்கிளர்மதன்குடைக்குநகைமணிக்காம்பிலென்ன
விலங்குறுபசும்பொற்காம்போடெண்ணில்வெண்குடையெழு
புலன்களைவென்றவீரன்போகியமறுகிலெங்கும் [ந்த
விலங்கினையன்றிவந்தவிலங்கின்வாலாடிற்றன்றே. (உசா)

(மாதர்களீட்டம்)

மாயைதன்றேல்வியெல்லாமாதர்க்கும்வந்ததன்றே
நாயகன்றன்னைப்பற்றி நாம்வென்றிகொள்வமென்று
போயுறுதன்மைபோலப்புணர்முலைக்கருநெடுங்கட்
டேயுநுண்மருங்குன்மாதர்திரள்பலவெழுந்தவன்றே. (உஎ)

(சேனையின்ஓசை)

பரிகளின்முழக்குமிக்கபல்லியமுழக்கும்பூட்கைக்
கரிகளின்முழக்கும்வீரக்கழலொடுசெல்லும்வெங்கோ
ளரிகளின்முழக்குமாதரணிகளின்முழக்குஞ்செங்கைச்
சரிகளின்முழக்கும்விம்மித்தடங்கடல்போன்றவன்றே. (உஅ)

(சேனையின்சிறப்பு)

ஆடுவகவரியெங்குமசைவனசிவிறியெங்கு
மூடுவகுடைகளெங்குமுழங்குவவியங்களெங்கும்
பாடுவவிசைகளெங்கும்பாய்வனகரிகளெங்கு
மோடுவபுரவியெங்குமுயர்வனதூளியெங்கும். (உகூ)

(சேனைக்குங்கடலுக்குஞ்சிலேடை)

* கரிகலமசையாநின்றகவரிகணுரைகண்மொக்குள்
விரிகுடைமதுகைவீரர்விதிர்க்கும்வாளுகண்மீன்பாயும்
பரிதிரைமுழக்கமார்க்கும்பல்லியமுழக்கமாகப்
பொருகடலெனவெழுந்துபோயதுவசவன்சேனை. (கூ0)

(வசவேசர் அல்லமனைவணங்கச்சேனையோடுசெல்லுதல்)

இன்னவாறெழுந்திரளொடுநந்தியெம்பெருமான்
றன்னைநேர்குருபரனெதிர்சென்றவன்றாளைச்
சென்னியால்வணங்குவனெனுமோகையாற்சென்றான்
றுன்னும்வானவர்தொகுதியும்வியப்பொடுதுதிப்ப. (கூக)

(புத்தரும் அமணரும்வசவேசர்முதலிய அடியார்களையிகழ்தல்)

அத்திறஞ்செலுஞ்செலவினையகங்குருட்டமணர்
புத்தர்கண்டிவனொன்கொலோவறிதெதிர்போதல்
பித்தனென்றுதம்மிறைவனைச்சொல்லுமிப்பேய
ரொத்திறஞ்செயானெனச்சிவசரணரையிகழ்ந்தார். (கூஉ)

(அமணர்கள்விச்சலராசன்முன்வசவேசரையிகழ்தல்)

மன்னன்விச்சலன்பாலடைந்தருகனெம்மன்னு
நின்னகர்க்கொருபுதுமையின்றுற்றதுநீகே
ணன்னிமித்தமொன்றெய்தியதேகொடுநந்தி
தன்னிடத்தொருவன்வருமென்றெதிர்சாரும். (கூகூ)

தண்டநாயகன்றோள்வலந்துடித்தது தன்னைக்
கொண்டுதான்வருங்குருபரனென்றெதிர்கோடல்
கண்டவோர்கனவிற்பெறுமடிசிலைக்கருதி
யுண்டுபோம்விருந்தினர்தமைத்தேடுதலொக்கும். (கூச)

ஒருவன்வந்திடுமெனவெதிர்கடற்படையொருங்கு
பரவிவந்திடச்செலுமிவன்றன்னைநீபார்த்துப்
பொருவின்மந்திரக்கிழமைநல்கியவுனைப்போல்வா
ரரவின்வன்றலைப்படிமிசையிலையெனவறைந்தார். (கூரு)

---

*யானையும்-கப்பலும்-சாமரமும்-நுரையும்-குமிழியும்குடையும்-மீகாமனும்--வீரரும்--வாளும்--மீனும்--குதிரையும்--அலையும் ஓசையும்-வாத்தியமும் என்றுபொருள்கொள்க.

(அரசன் அமணர்களுக்குவசவேசரின்மகிமையையுணர்ந்து புகல்தல்)

அருகர்வாசகங்கேட்டலுமுளம்வியந்தடிகேள்
விரகினுன்மிகுதண்டநாயகனுமெவ்விளைவு
கருதினுன்கொலோவறிகிலமுடிவுறக்காண்பம்
வருகநீரிருமின்களென்றிருந்தனன்மன்னன். (௬௬)

(அமணர்கள்செருக்கழியவசவேசர்முன் அல்லமன்வரநினைத்தல்)

தண்டநாயகன்றனதுளந்தங்குறத்தானத்
தண்டநாயகன்றன்மனந்தங்கியதலைவன்
றண்டநாயகன்றனையிகழ்சமண்செருக்கழியத்
தண்டநாயகனெதிர்செலநினைத்தனன்றனித்து. (௬௭)

(அல்லமன்வேற்றுருவடைந்துவசவேசர்முன்தோன்றல்)

என்னைக்காண்குவனெவ்வகைசெல்லினுமென்று
துன்னற்கோவணமொடுவிரிகுஞ்சியுந்தோன்ற
தன்னைக்காண்குநர்பித்தனென்றெள்ளவென்றனக்குப்
பொன்னைப்போலுநல்வசவநாயகனெதிர்போனான். (௬௮)

வேறு. (அவ்வுழிநின்றோர் அல்லமனுக்கஞ்சுதல்)

மருவிநின்றவரிவன்மருளனேயென
விரைவிலிங்ககலகவெனவிலக்கினு
ரொருவருங்கண்டிறையுருவுணர்ந்தில
ருருவுகண்டெள்ளுநருணரவல்லரோ. (௬௯)

(அல்லமன்புரியும்லீலாவினோதம்)

அல்லமனுயிடையாடலுன்னியே
பல்லெழுவாயுடைப்பாலனாகுவன்
கொல்லிளவேறெனக்குமரனாகுவன்
வில்லெனவுடல்வளைவிருத்தனாகுவன். (௭௦)

விஞ்சையர்மகிழ்வுறவீணையொன்றுகைக்
கஞ்சமென்மலர்கொடுகானம்பாடுவ
னஞ்சனவிழிமணியரிச்சிலம்படி
வஞ்சியர்மனமயல்வளரவாடுவன். (௭௧)

இந்திரனிவனெனயானைமேற்கொளா
வந்தொருபுடைநரர்மருளத்தோன்றுவன்
பைந்தொடிபெயர்தருபாணிபோலவே
பந்திமுன்முடங்குளைப்பரிகடத்துவன். (௭௨)

வானிடைக்கண்டனன்மனையிற்கண்டனன்
சேனையுட்கண்டனன்றெருவிற்கண்டனன்
யானெனக்கடிநகரெங்குந்தோன்றுவன்
ஞானநற்கண்ணினாற்காணுநம்பனே. (சங)

ஆடுநர்தம்முடனாடுநல்லிசை
பாடுநர்தம்முடன்பாடுமென்மலர்
சூடுநர்தம்முடன்சூடும்வாள்விதிர்த்
தோடுநர்தம்முடனோடுமல்லமன். (சச)

பொருவிலாவளநகர்ப்பொருந்துமானிடர்
வரைவிலாவாடலிவ்வகைசெய்கிற்பவ
ரொருவரோபலர்கொலோவுணர்கிலோமென
வெருவினாரல்லமன்விநோதநோக்கியே. (சரு)

(வசவேசர்அல்லமனைஐயமற்றறிந்துவணங்கினமை)

மண்ணிடைமறைவுறுநிதியவைப்பினைக்
கண்ணிடுமஞ்சனக்காரன்காண்கைபோ
னண்ணிடுமுணர்வுடைநந்தியெம்பிரா
னண்ணலையறிந்தனனையமின்றியே. (சசா)

உடம்பெலாமுள்ளமாயுருகிக்கண்கணீ
ரடங்குறுதொழுகமெய்விதிர்ப்பவன்பினாற்
றொடர்ந்தெலாவுயிரையுந்தொண்டுகொண்டரு
ணெடுந்தகாயருளெனநிலத்திறைஞ்சினார். (சஎ)

(அடியார்கள்வணங்குதல்)

தண்டநாயகனிலந்தண்டிற்றாழ்ந்தெழத்
தொண்டராயவனொடுதுன்னினாரெலாங்
கண்டுநீர்விழியுகக்கசிந்தவன்பினா
லண்டநாயகன்றிருவடியிறைஞ்சினார். (சஅ)

தேவர்கள்பூமாரிபொழிதல்)

நந்திதனன்பையுநந்திபால்வரு
மெந்தைதன்னருளையுமென்சொல்வாமெனச்
சிந்தினர்மலர்மழைதேவர்யாவருந்
துந்துமியதிர்த்தனர்தொண்டரார்ப்பவே. (சகூ)

கலியாணபுரமும்கைலையங்கிரியும்)

மயலிலாநங்குருவசவன்வாழ்தரு
மியலினாலல்லமனெண்ணிவந்தருள்
செயலினாலடியவர்திரள்களித்தலாற்
கயிலையேயானதுகல்லியாணமே. (ருய)

(அமணர்கள்பொறாமையுறுதல்)

தெரியநற்றண்டநாயகன்றன்செய்கையும்
பெரியவக்குருபரன்பெருமைதன்னையுங்
கரியமெய்ச்சமணர்தாங்கண்டுமன்பில
ரரியவற்றரிதழுக்காறுவெல்வதே. (ருக)

(அல்லமன்வசவேசர்மடத்திலுறுதல்)

தந்திரமுடிவெனுஞ்சைவதேசிகன்
வந்தெதிர்தனதுதாள்வணங்கினனொடு
செந்திருமகளுலாந்தெருவுட்போகியே
நந்திதன்மந்திரநணுகினனரோ. (ருஉ)

(தேவர்களும்வியப்புறும்ஆதனத்தைஅல்லமனேக்குதல்)

தேவருமுனிவருஞ்சித்தராகிய
யாவருமிதனியலின்னதென்றுளத்
தாய்வருநிலையுடையம்பராதன
மூவருமடிதொழுமுதல்வனேக்கினன். (ருங)

(அல்லமன்ஆதனத்திவர்ந்தமை)

அசைவறுமறிவுருவாகுமல்லமன்
றிசையுறுமணியணைச்சென்னிமீமிசை
வசையறுவழிநடைவசவதேசிக
னிசையமருலகிடையேறவேறினன். (ருச)

(அல்லமன்ஆதனத்திவரத்-தானேபூமாரிபொழிதல்)

கூறருமொளியுடைக்குதிரைத்தேரினன்
வேறொருமணிமயவெற்பிவர்ந்தெனத்
தேறருமணைமிசைதேசிகோத்தம
னேறலுமலர்மழையிழிந்தவென்பவே. (ருரு)

(வாத்தியமுழக்கமும்-அடியார்கள்தோத்திரமும்)

முரசொடுபல்லியமுழக்கெழுந்தன
துரிசறுமடியவர்தொகுதிகைகுவித்
தரகரவெனுமொலியண்டகூடமட்
டொருகணமொடுங்குமுன்னேடிற்றென்பவே. (ருசு)

(ஆறுதாரமுடிவின்நிட்களசிவம்போல்அல்லமன்
ஆதனத்திருந்தமை) வேறு.

முதனிலைமுதலாமூவிருநிலையின்மூலமாமுதலவாதார
விதழவிழ்கமலப்பொகுட்டினுணின்றவிலிங்கமேராறெனநின்
றுதன்மிசையிலகுநிட்களம்போலநுவன்றவேழாநிலையாகு [று
முதன்மிசையமலனல்லமதேவனமர்ந்தனனமரரும்வியப்ப ()

நூலசூக்குமகாரணமுதலியவுபாதியொழிந்ததுரியனைப்போல
அல்லமனையாவருமறிந்தமை)

டம்பொடுபொறிநாற்கரணமற்றுயிரொன்றுரைத்திடப்படுமுபா
டந்துளநிலையிற்சோதியாயிலங்கக்கண்டிடுதுரியனை [திகளைக்,
நடுந்தவிசமையவமைத்தசெம்மணிப்பொன்னிலைக [ப்போல,
டந்தனிவிசும்பென்றல்லமனிருப்ப [ளோரேழையுங்கடவா,
ரிருந்தவர்யாவருங்கண்டார். (கூஅ)

(அல்லமன்புகழை அடியார்கள் துதித்தல்)

டினர்சிலவரங்கைகள்கொட்டியல்லமன்பெரியதோர்புகழைப்
ாடினர்சிலவர்விழிபொழிவெள்ளம்பாய்வுறக்குவித்தகைதலை
டினர்சிலவர்நிலமிசைவீழ்ந்துதொழுதனர்சிலவர்மெய் [மேற்,
டினர்சிலவர்பரவினர்சிலவர்முக்கணனடியவரன்றே. [ப்புளக,

(அல்லமன் ஆதனத்தமரவசவேசர்பரவசமடைந்து ஆனந்தவாரி
யிற்படிந்தமை)

ந்திபம்விடயங்கரணமெய்யென்னும்யாவையுங்காண்கிலனே
ந்தரவணைமேலிவர்ந்திருந்தருளுமண்ணலைக்கண்டவப் [ங்கு,
ந்தியபரமாநந்தவாரிதியுண்மூழ்கினனமூழ்கினன [பொழுதே;
நந்திரமெவற்றுஞ்சிறந்ததுசைவதந்திரமெனுமருணந்தி. [ம்மா,

(அல்லமன் தன்னைப்புறத்துக்கண்டவசவேசனைப்புகழ்தல்)

ண்டலமவத்தைகுணமபிமானமலமிவையனைத்தையுங்கடந்து,
கண்டிடும்வண்ணம்புறத்துநீயெம்மைக்காணியவமைத்தவி [ட்,
வெளிடிமைசுருட்டுங்கருங்கடலுலகில்வேறுளர்செ [ச்செய்கை,
தொண்டர்கடுதிக்கும்வசவனைத்துதித்தான்சுர [ய்வதன்றென்று,
லாந்துதிக்குமெம்பெருமான். (சுக)

(வசவேசர்புகழ அல்லமன் ஆதனத்திலிருத்தல்)

உன்னருளுளதேற்கமலன்மாறொழிலுமொருசிறுதுரும்புசெய்கி
மென்னநல்வசவன்புகன்றுகைகூப்பியிணைவிருபனலுகவு [ற்கு,
தன்னுணர்கிலனுய்வசமறநிற்பத்தண்கதிர்ச்செமமணிகு [ருகித்,
பொன்னரியணைமேல்விசும்புறவிருந்தான்புல்லருமல்ல [யின்ற,
மதேவன். (சுஉ)

இருபத்திரண்டாவது-சூனியசிங்காதனத்திலிருந்தகதி
முற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-கா௪ககூ.

இருபத்துமூன்றாவது

ஆரோகணகதி,

ஒருவருண்ணவொருவர்பசிகெடார்
தரையிலென்னுந்தகுமொழிபொய்த்திட
வருளினல்லமனரும்பசிகெட
விரவியுண்டமிகுதிவிளம்புவாம். (௧

தண்ணந்திங்களிற்றண்ணெனத்தண்கதிர்
வண்ணங்குன்றுறுஞாயிறுவார்சிலைப்
பண்ணங்குன்றுறுடான்மையினாதனத்
தெண்ணந்தேவனிருந்தருள்காலையின். (௨

ஆதனத்துற்றஅல்லமனைக்கண்டவசவேசர்அசைவற்றிருந்தமை

வசவனுள்ளம்வயல்புகுநீரென
விசயநல்லமன்மேனிவடிவமா
யசைவிலன்பிறிதொன்றுமறிந்தில
னிசையுமோவியமென்னவிருந்தனன். (௩)

(அல்லமனுகியவமுதத்தைச்சென்னவசவையர்நோக்குதல்)

கழுமணித்தவிசென்னுங்கலத்திடை
யழிவறத்திகழல்லமனுகிய
செழியநற்சுவைசென்னவசவனும்
விழியினுக்குவிருந்திட்டனனோ. (௪)

(மோளிகைமாறன்மடிவாலமாச்சையர்மனமாகியவண்டினங்கள்அல்லமனுகியமலரிடத்துற்றமை)

முனிவினைக்கொலுமோளிகைமாறனும்
வினையினைத்தெறுமெய்ம்மடிவாலனுந்
தனைநிகர்க்குந்தவிசமர்பூவினை
மனமெனப்படும்வண்டுறவிட்டனர். (௫)

(அல்லமனிருந்தஆதனத்தைஅடியார்கள்சூழ்ந்தமை)

முன்னிருந்தமுதுக்குறைவாளரும்
பின்னடைந்தபெரியருமாகிய
மன்னிருந்தமணித்தவிசின்புடைத்
துன்னியெங்கணுஞ்சூழ்ந்தனர்தொண்டரோ. (௬)

(ருத்திராக்கமணிபவர், பஞ்சாக்கரதியானமுடையார்சிலர்)
புண்டரந்திருநெற்றியிற்பூசிமெய்க்
கண்டியென்னுங்கலனணிவார்சிலர்
பண்டைநான்மறையின்பயனாகவே
கொண்டவஞ்செழுத்துங்குறிப்பார்சிலர். (எ)

(ஆகமவிதிப்படிசிவார்ச்சனைபுரிபவர்சிலர்)
நந்தனந்தருநாண்மலர்மஞ்சனஞ்
சந்தனஞ்சுடர்தண்புகையாதிகொண்
டிந்தியங்களெலாமடங்குள்ளமோ
டந்திவண்ணனையர்ச்சிப்பரோர்சிலர். (அ)

(இந்திரியசயமுடையார்க்கேவல்புரிபவர்சிலர்)
தாவில்பூசனைதாம்புரிகிற்பதிற்
பாவெலாஞ்சொலப்பட்டிடுமைம்புலக்
காவல்செய்யுங்கருத்துடையார்தமக்
கேவல்செய்தனன்றென்றுசெய்வார்சிலர். (௯)

(சிவபிரானைத்தோத்திரஞ்செய்பவர்சிலர்)
பூசனைத்தொழில்பூண்பதினெண்மடங்
கீசனைத்துதித்தேத்துதனன்றென
வாசலொத்தவுளமிலராய்ப்புலத்
தூசிநிற்பத்துதிப்பவரோர்சிலர். (௰)

(வேதத்தின்முடிவாகியதத்துவமசியின்பொருளைத்
தியானிப்பவர்சிலர்)
அங்கலிங்கமயிக்கமிதென
மங்கலந்தருமாமறையின்முடித்
தங்குறுந்தத்துவமசிதன்பொருள்
பங்கமின்றிப்பகர்பவரோர்சிலர். (௧௧)

(அல்லமறுகிய ஆசிரியனிடத்திற்பசுபதிபாசவியல்பைத்
தெளிபவர்சிலர்)
பாசமேதுபசுவெனப்பட்டதே
தீசன்யார்பதியெவ்வகையாருயிர்க்
காசுதீரவருளுமருளுடைத்
தேசிகாவெனத்தேர்பவரோர்சிலர். (௧௨)

(ஞானபூசையாற்சிவபோதமிழந்தவர்சிலர்)
புறந்தினஞ்செயும்பூசையினன்றெனச்
சிறந்தகஞ்செய்தியானவுருவிமெய்
மறந்திருந்தமனஞ்சிவலிங்கமுற்
றிறந்திடுந்திறமெய்தினரோர்சிலர். (௧௩)

(இடகலைபிங்கலைதடுத்துச்சுழிமுனையினிறுத்துனர்சிலர்

ஓடிமீளுமுயிர்நின்றிடாதெனி
னீடுமாமனநிற்பதன்றுதலால்
வீடுமேவரிதென்றுவிதிமுறை
நாடிவாயுநலிபவரோர்சிலர். (கசு)

(அல்லமனிடத்தில்அன்புவைத்தவசவேசனைக்கண்ட
அடியார்கள்மனம்வருந்திநீங்கினமை)

இனையராகியிருந்தவக்காலையி
லனையனுகியவல்லமன்றன்னிடை
நினைவெலாமுறநின்றுதமதிடை
மனமிலாதவசவனைக்கண்டனர். (கரு)

வேறு.

பெரியவர்சிறியவரொன்னும்பெற்றிமை
யரவணிகடவுடனடியர்தம்முளே
தெரிபவனெவனவன்சிறியனேயென
விரிவுறுமறையெலாம்விளம்புமென்பவே. (கசு)

ஆவுரித்திடினுநீறணியுமன்பனம்
மாவுரிததவனெனவணங்கத்தக்கவன்
பூவுரித்தவண்பதம்புனையப்போற்றுற
நாவுரித்தெனமறைநான்குமோதுமால். (கஎ)

வந்தவர்வருபவர்வருகின்றூர்களா
மந்தமிலடியர்மாட்டாற்றுஞ்செய்கையைச்
சிந்தனைசெய்கிலன்றேசிகன்செயு
மிந்திரசாலமுற்றிருந்துநந்தியே (கஅ)

பத்தியிற்றவறினேன்பாலிருந்துநாந்
துய்த்துடற்சுமப்பதிற்றுறத்தனன்றென
மெய்த்தவக்குழாமெலாம்வெகுண்டுபோயின
வத்தனற்றண்டநாயகனைவிட்டரோ. (கசு)

(அடியார்கள்நீங்கவசவேசர்மணவினைமுடிந்தமனைபோலிருக்கு
மடத்தைநோக்கினமை)

துன்றியமெய்த்தவர்துறந்துபோயபின்
மன்றல்செய்மற்றைநாண்மனையையொத்தொரு
தன்றனிநற்புரந்தனிப்பக்கண்டன
னன்றறிநற்செயனந்திதேவனே. (உ௦)

(அடியார்கள்அமுதருந்தாதொழிந்தமைநோக்கிவசவேசர்மனம் வருந்துதல்)

வழுவினனன்புசெய்வழியையின்றுநான்
குழுவுறுமடியவர்க்குறித்துச்செய்தவிவ்
வொழிவறுமடிசிலுண்டொழிந்திடாதுநீர்ந்
தழிவுறுமேயெனவகந்தளர்ந்தனன். (உக)

சங்கமபத்திசெய்தண்டநாதனே
சங்கமபத்திசெய்தகைமைபூண்டுநான்
சங்கமபத்தியிற்றவறினேனென்றாற்
சங்கமபத்திசெய்தன்மையெண்மையோ. (உஉ)

இழிப்பினும்வெறுப்பினுமில்லினுள்ளன
வழிப்பினுமுடம்பினையரிந்துகொல்லினும்
பழிப்பறுசங்கமபத்திசெய்பவ
னொழிப்பதுபிறவியென்றுலகமோதுமே. (உங)

(அடியார்கள்பசிநீங்கஅல்லமன்வசவேசரிடத்தில்அமுதருந்த நினைத்தல்)

இம்முறைசங்கமபத்தியெய்திய
வெம்முடைநந்திதனெண்ணமுற்றுற
வம்மடையடிசிலுண்டலமன்மாதவர்
தம்முறுபசியெலாந்தணிப்பவுன்னினான். (உச)

(வசவேசரிடத்தில்அல்லமன்தனதுபசிநோயைவிளைவி லகற்றென்றல்)

ஒருவன்யான்சிறுபசியுடையன்சிற்றுண
விளைவுறவிடுதிநீவேண்டுமாறுபின்
பரிவுளவடியவர்பாற்செயென்றனன்
பொருவறுவசவனைநோக்கிப்போதகன். (உரு)

(வசவேசர்அல்லமனையுபசரித்துஅமுதுசெய்வித்தல்)

ஐயனுமுனிவுறுதருளும்வண்ணம்யான்
செய்யுநல்வினையெனமகிழ்ந்துதேவனைப்
பையவுண்மனையிடைப்பணிந்துகொண்டுபோய்ப்
பெய்யுமென்மலர்மணிப்பீடத்தேற்றினான். (உசு)

ஏற்றியவருள்வசவேசனெம்பிரான்
காற்றுணைமலர்களைக்கந்தமஞ்சன
நாற்றமென்மலர்நறும்புகைவிளக்கெனப்
போற்றியவிவைகொடுபூசைசெய்தனன். (உஎ)

பூசனைசெய்தபின்போற்றிநின்றுபொற்
பரிசனமமைத்துமென்பதம்படைத்துமேல்
யோசனைகைகமழ்நறியமொள்ளிய
போசனமுறையிடப்புரிந்துநந்தியே. (உஅ)

அருந்துகவெனவடிதொழுலுமங்கலந்
திருந்தியமுறுவளோரவிழுஞ்சேடியா
தருந்தினஞரிமைப்போதினல்லமன்
பொருந்தியவவரிறும்பூதராகவே. (உக)

பின்னருமம்முறைபெய்யவவ்வயனவ்
வன்னமுமம்முறையருந்திப்பின்னரும்
பின்னருமம்முறைபெய்யவுண்டனன்
றன்னுளம்வியந்தனன்றண்டநாயகன். (கூ0)

சிறுச்சிறிதனமிடுஞ்செய்கையாலரு
ளிறைக்கெழிலுதரசெந்நெருப்பெழுந்ததால்
விறற்கனலமுறைவிறகிடக்கனன்
றுறப்பெரிதெனவெழுந்தோங்கல்போலவே. (கூக)

எண்ணியவெண்ணியாங்கியற்றுமேவல
ரண்ணலும்வருகெனவழைத்துநம்மனைப்
பண்ணியபதமெலாம்படைமினென்றலுந்
துண்ணெனவனமிடுந்தொழிறொடங்கினர். (கூஉ)

வேறு.

அளவறுமடியர்க்கெல்லாமாக்கியவடிசிற்குன்றங்
கொளவுறுகூடையோடுகூடைகடாக்கக்கொண்டு
வளமுறுகயிலைக்குன்றம்பெயர்த்திவண்வைத்ததென்னத்
தளவுறவடிசிலெங்கடம்பிரானெதிர்குவித்தார். (கூகூ)

பருப்பொருபொருப்பெனத்தாம்படைத்தனர்சிலரொடுத்து
விளைப்புதுநெய்கவிழ்த்துவிடுத்தனர்சிலர்மணக்கும்
பொரிக்கறிபளிதம்பாகுபுளிங்கறிபலவுமெல்லா
நிணத்தொருசிலர்சொரிந்துநின்றனர்முகில்கள்போல. (கூச)

வடைபடுதிகிரியாகமாங்கனிகவண்கல்லாக
வுடைபடுகழைக்கரும்பங்கொண்கதையாகக்கொண்டு
கடைபடுமுலகிற்கெல்லாங்காரியகருத்தன்முன்னர்ப்
படைபடையெனச்சொரிந்தார்படைமுகத்திளைஞர்போல. (கூரு)

குளங்கரையாகவந்தக்குளத்திஞ்டபசுவின்றீம்பால்
விளங்குறுமமுதவேலைவிடுத்தெனவிட்டார்சில்லோ
ருளங்கனிமூவர்செய்யுளொத்தமுக்கனியுமேனோர்
வளங்கெழுதொடர்புபோலுமற்றையபழமுந்தூர்த்தார். (கூசு)

ணண்ணிலரிடுவவெல்லாமினியனவின்றுவென்னுன்
கண்ணிமையொடுங்குமுன்னங்கடிதயின்றுதவுருமல்
வண்ணமென்மலர்க்கைவாங்கிவறிதிருந்தனனெங்கோன்றேர்ப்
பண்ணவன்பரிக்குமேடுபள்ளமென்பனவங்குண்டோ. (கூள)

(மடைத்தொழிற்புலவர்வசவேசருக்குக்குறிப்பறிவித்தல்)

சற்றினுமுன்கவென்றுதமருபசரியாவண்ணஞ்
சற்றினுமிடுகவென்றுதம்பிரானுண்ணுநின்றுன்
மற்றிதுகண்டுநின்றோர்மட்கலமொழியவேறு
பற்றிலையென்றுநந்திதிருமுகம்பார்த்துச்சொன்னூர். (கூஅ)

(அடியார்கள் தங்களில்லிலுள்ளவமுதுகளைக்கொண்டுவந்து படைத்தல்)

உண்விளையாடல்செய்யுமொருவனைக்கண்டுவேண்மேற்
கண்விளையாடுநெற்றிக்கடவுண்மெய்யடியாரெல்லாம்
விண்விளையாடுஞ்சோலைவீயனகரிடத்திற்செல்வப்
பெண்விளையாடுந்தம்மிற்பேரனமிடுதற்கெண்ணி. (கூகூ)

பாண்டின்மேலேற்றிவந்தும்பானையிற்சுமந்துவந்தும்
வேண்டியபாகமுற்றுவேறுவேறுயவன்னை
மாண்டகைக்குரவனுண்ணவளவிலர்சொரிந்துயர்த்தா
ரூண்டழல்வெறுக்கும்வண்ணமூட்டுவமென்பார்போல (சுo)

மலையெனவமலஞானவாரிமுன்சொரிந்துயர்ப்பா
ரிலைமலர்பசுங்காய்கந்தமிளஞ்செழுந்தண்டாற்செய்த
வுலையமைபல்காயம்பெயொண்கறியமுதுவேறு
பலபல்முறைமயங்கப்படைப்பார்வல்விரைந்துவந்து. (சுக)

குய்கமழ்கறிக்ளிட்டுக்குவிப்பவர்சிலரொடுத்து
நெய்கவிழ்கையராகிநிற்பவர்சிலர்நிரம்பப்
பெய்கவிழ்சொரியென்றன்பால்பெய்பவர்சிலரளைந்த
கைகமழ்தயிர்க்குடத்தாற்கவிழ்ப்பவர்சிலரங்கம்மா. (சுஉ)

இட்டவர்மறியவன்னமிடுதற்குவிரைந்துசெல்வார்
முட்டுமொதிர்நடந்தமூரல்கைவாங்கிவாங்கிக்
கொட்டுவாடிசிறந்தகூடைகள்கவிழ்த்தெறிந்து
தட்டுவரனம்படைக்குந்தம்பிரானடியூரன்றே. (சுரு)

(அல்லமனுக்குப்பசிநோய்தணியாமையால்பலபண்டங்களநு லொழிக்கநினைத்தல்)

இன்னணம்படைத்தவெல்லாமிமைப்பினிலயின்றுசைவ
மன்னவன்வயிற்றின்வெந்தீயளர்த்தினிர்நீயினெல்லா
மென்னநல்வசவேசிவனிருந்தபல்பண்டங்கொண்டு
முன்னவன்பசியையாற்றமுன்னிமற்றிதனைச்செய்தான். (சுச)

அவரையும்பயறுமெள்ளுமரிசியுமவலுங்கொள்ளுந்
துவரையுங்கடலையுஞ்செஞ்சோளமுநெல்லும்புல்லுங்
குவரையுங்கயிலையும்பொற்குன்றமும்போலஞாலத்
தெவரையுங்களிப்புச்செய்யவெங்கணுங்குவிப்பித்தானால். ()

(வசவேசர்மனத்தாலியற்ற அல்லமனிணைவாலயின்றமை)

குன்றெனக்குவித்தவெல்லாங்கொள்ளெனக்கொண்டுநம்பன்
மென்றதைக்கண்டத்துளின்னுமெல்வனகொணர்தியென்ன
வன்றிறற்றண்டநாதன்மனத்திலைவையயற்றி
நின்றிடத்தம்பிரானுநினைவிலைவையயின்றான். (சுசு)

(அடியார்கள்வசவேசரியல்பையும்அல்லமனியல்பையுநோக்கிப்
புகன்றுவணங்குதல்)

நோக்கினாலளித்தவெல்லாநோக்கினாற்றொலைத்தானந்தி
வாக்கினாலளித்தவெல்லாம்வாக்கினால்வள்ளலுண்டு
போக்கினானிடுதலுண்ணலென்னுமிப்போரின்கண்ணே
தூக்கினாலிருவர்தாமுந்தோல்வியுற்றுடைந்தாரில்லை. (சுஎ)

படைத்திடுந்தொழின்முயன்றபத்தனதியல்புமன்ன
துடைத்திடுந்தொழிலினின்றதூயனியலுநோக்கி
யடுத்தநற்பத்தரெல்லாமனையவரிருவர்திரு
மெடுத்துரைத்துளம்வியப்புற்றிறைஞ்சினரொருங்குமாதோ. ()

இடுதற்குவல்லானந்திபிடும்பொருளொற்றையுங்கை
தொடுதற்குவல்லானிந்தத்தூயனென்பரிவ்வா
றிடுதற்குவல்லாரில்லையென்பரிவ்வாறுநாங்கை
தொடுதற்குவல்லார்தம்மைச்சொல்லவுங்கேளேமென்பார். ()

(அல்லமனுக்கமையுமுணவை வசவேசருக்குச்சென்னவசவை
யர்புகல்தல்)

கண்ணப்பனன்பினானேசுறியெனவமைத்தவூனை
யுண்ணப்பனானின்றேறுமுயிருணினமைவனென்று
வண்ணப்பொன்னனையசென்னவசவதேசிகன்வணங்கி
விண்ணப்பஞ்செய்தான்றுங்கவிடைமுகங்கரந்தானோடு. (ருய)

(மடிவாலமாச்சையர்புகல வசவேசர்அல்லமனுக்குப்பொருந்து
மாறுவீழுதருத்துவித்தல்) வேறு.

சென்னவசவன்சொல்வியவச்செயலேசெய்யுஞ்செயலென்று
மன்னுமருளின்மடிவால்மாச்சிதேவன்வந்துரைப்ப [து
வென்னையுடையானும்மொழியேயெனதுமனத்தைத்தேற்றும
பின்னையுளதோ*கதகமலர்ப்பெருநீர்தெளிந்தற்கென்றுரைத்து.

* கதம்-தேற்றாங்கொட்டை.

)பாறிகள்கரணம்பூதங்கள்புலன்கண்மற்றும்பல்வகையு
:றிகளாகவாருயிரோகலந்துண்பதமாநீயுண்ணப்
)பெறுவதிலன்யானெனநின்றபிறவிப்பணிதீர்மருத்துவன்ற
ாறியமலர்மெல்லடிபணிந்தானமையாளுடையவருணந்தி. ()

(அல்லமன் அடியார்கள்களிக்கவசவேசரைப்புல்லுதல்)

பசவனிலேகண்டருண்ஞானவள்ளலல்லமப்பெருமான்
ாசியின்வந்தேலன்பொருட்குப்படர்காமக்குவந்திலன்யான்
சியுநினதுமனத்தன்புகாணவந்தேனென்றேத்தி
பிசையின்மலியுமரனடியார்யாருமகிழவெடுத்தணைத்தான். ()

(வசவேசர் அல்லமனைப்புகழ்ந்துவணங்கிநிற்றல்.)

ண்போலுயிர்கள்கண்டறியக்கதிர்போற்காட்டும்பெருமானே
புண்போன்யானுவூட்டுமுனக்கூட்டுவேனென்றெழுந்தமையா
)லண்போதென்போற்பேதைமையாரில்லையில்லையென்றனன்
பண்போடமலனெதிர்நின்றான்பத்திவடிவமாயினான். [பின்,

(அடியார்கள்புகழ்ந்துமகிழ்ந்தமை.)

)செம்மைநெறியானருணந்திதேவன்றன்னைப்புகழ்வமோ
)பொய்ம்மைதீருமல்லமனைப்புகழ்வமோவிங்கன்றியிவர்
தம்மைவிழியாற்காண்பதற்குத்தவஞ்செய்துடலமிதுபெற்ற
)வெம்மையாமேபுகழ்வமோவெனநின்றனர்தம்பிரானடியார். ()

(அல்லமன் ஏவுதலால்வசவேசர் அடியார்களுக்கமுதருத்திவிக்கச்
செல்லுதல்)

பரிந்தந்திமுகநோக்கிப்பசித்தாரொன்றுநீதளரப்
பிரிந்தவந்தவடியர்தமைப்பிறங்கலனையநின்மாடத்
தருந்தவணங்கிக்கொணர்தியெனவறிவானந்தமயன்கூற [தில்
விரைந்துவிடைகொண்டெழுந்தன்புவெள்ளஞ்சென்றதவரிடத்

(வசவேசர் அல்லமனருந்தியவுணவுகளியாவுமருந்தியகமகிழ்வுற்
றிருக்குமடியார்களைக்காண்டல்)

)சென்றவசவனருட்குரவன்றிருமேனியிற்றானங்கணிந்த
மன்றல்மலருஞ்சந்தனமும்வடிவிற்றிகழமடிநிமிர்ந்து
நின்றன்முதலகறிமணக்கத்தேக்குவிடுத்துமுகமலர்ந்து [ல்.
)கொன்றைகமழ்வேணியனடியார்குழாங்களிருப்பக்கண்டனன்

(வசவேசர்வணங்கிஅழைக்கஅடியார்கள்புகல்தல்.)

கண்டகந்தியடிபணிந்துகடையேன்செய்தபிழையெல்லா
மூண்டுபொறுமின்வருகவெனவுள்ளங்களிப்புற்றாங்கிருந்த
)தொண்டர்சவநின்பெருமைசொல்லவெளிதோவயிராப்
பண்டுபோல்வாய்கடொழிற்படாமலயின்றேமின்றென்று. ()

தேவருண்ணவியணவசெந்தீமுகத்திலிடுதல்போ
லோவில்யாங்களெல்லேமுமுண்ணவடிசிலல்லமன்ற
ஞவின்மருவவிடுநினையோர்நாவோபுகழுங்கரத்ததென
வாவியனையநந்திசிரபலனடியார்புகன்றேத்தி. (ருகூ)
உலகிலொருவன்சிவயோகியுண்டதம்மாசராசரமா
மலகிலுயிர்களெலாமுண்டதாகுமென்னமறைகூறு
மிலகுமுறைமையைக்காட்டியானின்றிங்குணரவுணர்த்திஞன்
கலகவினைகடீர்க்குமருட்கண்ணன்றிசழல்லமதேவன் (சுo)
ஆதலாலவ்வல்லமனையருத்தலெம்மையெலாமருத்தல்
பாதமவனைப்பணிதலெமைப்பணிதலாகுமெஞ்ஞான்றும்
பேதமில்லைநல்வசவப்பெயரோய்செல்கவென்னமலை
மாதுதழுவக்குழைந்ததோள்வள்ளலடியார்தமைவணங்கி. (சுக)

(வசவேசர்மீண்டுஅடியார்களியல்பைஅல்லமனுக்குப்புகல்தல்.)

மீண்டுநந்தியல்லமனர்மென்பூங்கமலவடியிறைஞ்சி
யாண்டபெருமானடியார்களன்னையுண்டவுணவுகரு
வீண்டுமெகவுமுண்ணல்போலெந்தையுண்டவெலாமுண்டு
பூண்டமகிழ்வோடிருந்தனர்நீபுனைந்தமலரும்புனைந்தென்ருன்.

(உலகோர்புகல்தல்.)

மாறனடித்தவடிபட்டமன்னுமுயிரின்றிறமெல்லா
மீறில்புகழ்க்கங்கணவசவனிட்டவடிசிலுண்டுபசி
யாறியிருந்தவாதலிஞலல்லமன்பூரணனென்னக்
கூறுமொழிமெய்மெய்யென்றகூறியுலகங்களித்ததால். (சுஉ)

(அல்லமன்வேதாகமத்தின்பொருளைவசவேசருக்குணர்த்த நினைத்தல்.)

இவ்வாறருந்தியமைதிபெருமெங்கள்பரமயோகிதான்
றெவ்வாகியவைம்புலன்வென்றதிறல்கூர்வசவன்றனைமகிழ்ந்து
சைவாகமமுநான்மறையுஞ்சாற்றும்பொருளையுணர்த்துதற்குச்
செவ்வாய்மலரத்திருவுள்ளஞ்செய்துதனிவீற்றிருந்தனஞல். ()

இருபத்துமூன்ருவது-ஆரோகணகதி-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கககo.

இருபத்துநான்காவது

மரீஞலயகதி.

மயங்குதலின்றிமஞேலயமெய்திற்
சயந்தருமுத்தித்தலைப்படுமென்று
நயந்தருமல்லமநாதன்விளங்க
வியம்பியவண்ணமியம்புதுமன்றே.

பத்தர்கடங்கள்பசிக்குணுமையன்
றத்துவநல்குமருத்தொடுதெங்க
வத்தலையன்பொடகங்குழைகின்ற
வித்தகனந்திவிளம்புவனன்றே. (உ)

(வசவேசர் அல்லமனை நோக்கிபிரமத்தின்னிலைமையையறியுமா
றுணர்த்தென்றல்.)

விருப்புவெறுப்புருவாம்விடயத்தோ
டிருக்குமயற்சகமென்பதிலாமற்
பரப்பிரமத்தியல்பார்ப்பதெனக்குத்
தெரித்தருளென்றுரைசெய்துதுதித்தான். (ங)

(அல்லமன்வசவேசருக்குஉபதேசஞ்செய்தல்.)

அண்ணலுமார்வமடைந்தருணந்தி
மண்ணுலகோர்தளைமாறுபுஞானக்
கண்ணுறுமாறுகடாவினனென்று
புண்ணியனோடுபுகன்றிடுகின்றான். (ச)

யானெனதென்பதிருந்திடுமாறு
ஞானமுறானதுநண்ணிலனாகிற்
றானிலையாதசகந்திகழ்கிற்குந்
தீனமிலாதசிவந்திகழாதே. (ரு)

கறங்கெனுமாறுழல்கின்றகருத்துப்
பிறந்திறவாதபெரும்பிரமத்தி
லிறந்திடில்யானெனதென்னுமகந்தை
மறைந்திடுமென்றிமறைந்திடுமோதான். (சு)

யானிதுசெய்வலெனக்கிதுசெய்வ
ரேனையரென்னவிருந்தகருத்தான்
மேனிகழ்முத்திவிரும்பவிருட்டாற்
பானுவைமேவுறுபற்றைநிகர்க்கும். (எ)

இருவினைதாம்வரும்யானெனலாலவ்
விருவினையால்வருமின்பொடுதுன்ப
மிருவினையானெனலின்றெனிலில்லை
யிருவினையில்லெனிலில்லைபிறப்பே. (அ)

மனத்தையடக்கமனந்துணையாகும்
பினைத்துணையின்றதுபெற்றனனாயிற்
றனிச்சிவமேயொருதானெனவாழ்வ
னினைத்துமறந்துநிலத்துழலானே. (கூ)

வாரணமாகுமனத்தையடக்கிற்
காரணமாயைகளெங்கொழியாத
பூரணமாகியபோதமடைந்திட்
டாரணமோதுமரும்பொருளாவான். (க

வேறு.

விரிந்தநெஞ்சங்கருவியாம்விடையமுணரவிரியாம
லொருங்குநெஞ்சங்கருவியாந்தன்னையுணரவொருங்காமல்
விரிந்தநெஞ்சமுடையனைவிடாதுபிறவியென்றுணர்க
வொருங்குநெஞ்சமுடையானையுறாதுபிறப்பென்றுணர்கவே. ()
அந்தக்கரணசுத்தியையறிவையறிதற்சாதனமவ்
வந்தக்கரணசுத்திதனக்குறையுங்கருமமாரணங்க
ளந்தக்கரணசுத்திதாறுறாதவாவற்றிடுதலே
யந்தக்கரணசுத்தியினாலடைவன்பிண்டப்பெயரன்றே. (சஉ)
ஆசையறுதல்வீட்டின்பநேரேயடைதற்காரணமா
மாசையறுதலலதில்லைப்பலநூலனைத்துமாய்ந்திடினு
மாசையறுவோன்சிவனாதறின்மைமெனநன்றறிந்திருந்து
மாசையுறுதலென்கொண்டோர்வந்தோமனிதரறியேமே. (கரு)
ஆசுதீர்ந்தமனத்திலிடையன்றியுணர்வுதோன்றாது
மாசுதீர்ந்தவாடியிடையன்றிவதனந்தோன்றுமோ
பாசநீங்குபராஞ்சுடரைநினைக்குநினைவாற்பற்றுமனங்
காசநீங்குகண்போலத்தன்னைக்காணவிளங்குமால். (கசு)
வானமல்லேன்வளியல்லேனழனீரல்லேன்மண்ணல்லேன்
ஞானமல்லேன்வினையல்லேனானேசிவமென்றெண்ணினேறு
னூனமில்லாவொருசிவமேயாவனிவ்வாறுன்னாது
னீனமெல்லாமுடையவுடம்பெடுத்துச்சூழலுமெஞ்ஞான்றும். ()
தன்னைச்சிவமென்றறிந்தவனேயறிந்தான்றன்னையுண்மையாத்
தன்னைச்சிவமென்றறியாதானறியானென்றுந்தன்னுண்மை
தன்னைச்சிவமென்றறிந்தவன்றேதாழ்வாம்பாசந்தனைநீப்பன்
றன்னைச்சிவமென்றறியாதான்றனக்குப்பிறப்பேதுணையாகும்.
தன்னைப்பேதமாய்க்காண்கைசகத்திற்காணப்பட்டதாந்
தன்னைப்பேதமறச்சிவமென்றறிவோன்ஞானிதானொருவ
னென்னக்கருதிமறையதுநீயாறுயென்னவத்துவிதந்
தன்னைப்புகலுங்கண்டதனைச்சாற்றன்மறையின்கருத்தன்றே.
தூய்தாகியநெஞ்சுடையார்க்குத்தாமேசிவமாத்தோன்றுமாற்
றீதாகியநெஞ்சுடையார்க்குத்தெளியவபேதமிகலின்றி
வேதாகமங்கள்விளம்பிடினும்விளங்காதென்றும்வேறென்னுய
வாதாலழிவரவர்மாயைமயக்கமயங்குமதியினர். (கஅ

நெஞ்சஞ்சோகம்பாவனையினிற்கநிறுத்திவிடயங்க
ளஞ்சுந்துறவாத்துறந்தசிவயோகியொருவனடியிணையிற்
றுஞ்சுந்திருமால்முதலமரருள்ளமவனைத்துதித்திலிறஞ்சா
தெஞ்சுந்தவமாமுனிவரிலையெனநான்மறையுமியம்புமால். (கக)

(உபதேசம்பெற்றவசவேசர்அல்லமனைவணங்கஅடியார்களியாவ
ரும்வணங்குதல்.)

என்றுகருணைபொழிவிழியெங்கோமானுண்மையினிதியம்ப
நின்றவசவராயனுளமழல்சேர்மெழுகினெக்குருகிச்
சென்றுகுரவனடிபணிந்தான்சென்னவசவன்முதலாகத்
துன்றுசரணருய்ந்தனம்யாமென்றுதுதித்துத்தொழுதனரால். ()

(அல்லமன்தனதுதொழிலில்நிற்றல்.)

இவ்வாறருளாற்றனையுணர்த்தியிருந்தஞானவியல்வீர
சைவாசிரியனல்லமனித்தரையிற்பருவந்தலைசிறப்ப
வுய்வானினைந்துதனைநோக்கியுற்றவடியார்க்குபதேசஞ் [ளுன்.
செய்வானியன்றவடிவொடுசென்றருள்செய்செயல்செய்துலாவி

இருபத்துநான்காவது-மனோலயகதி முற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-ககஙுக.

இருபத்தைந்தாவது.

மான்மியகதி.

வியனிலமேவியவிழுமியோர்க்கெலாஞ்
செயிரறுமல்லமன்செய்தநன்றியைக்
கயிலையினுதல்விழிக்கடவுடன்புடை
மயிலியலொடுசொலுமாறுகூறுவாம். (க)

ஆயிடையருணந்தியாதிமாதவர்
நேயமோடமர்வுறநிறுவியல்லமன்
மாயிருஞாலமேன்மாணிடர்க்கெலாம்
போயருள்செயுந்தொழில்பூண்டுளானரோ. (உ)

(திருக்கைலாயத்தில்உமாதேவியார்சிவபிரானைவினுதல்.)

இன்னணமல்லமனிருநிலத்துறத்
தன்னிகர்கயிலையிற்றிங்கந்தாங்கிய
பொன்னணைமிசையமர்புராரிதன்னொடு
மின்னனீமுலையுமைவிளம்பன்மேயினள். (ங)

(சிவபிரான் அம்பிகைக்கிநந்திதேவர்-சத்துவகுணமாயை, சிவகணங்கள் ஆகிய இவர்கள் பூவுலகில், அவதாரஞ்செய்துநடாத்திய வியல்பையும் வீரசைவசமயாசாரத்தையும் அச்சமயிகளுக்குப்போதகாசிரியனாகிய அல்லமன்பெருமையையும் விரித்துரைத்தல்)

அல்லமனருள்பெறற்கடைந்தநந்தியோ
டெல்லையினின்கணமெனதுநற்கலை
மெல்லியனிலமிசைமேவிச்செய்ததென்
சொல்லுதியெனவுமையிறைவன்சொல்லுவான். (ச)

நந்திநல்வசவனாநாமங்கொண்டமர்ந்
தந்தமிலெம்மடியவரையாமெனப்
புந்திசெய்தவர்விழைபொருளளித்தமண்
சிந்தியநிலமிசைச்சிறப்புற்றானரோ. (ரு)

அறஞ்செயுநின்கலையாகுமங்கைபோய்ச்
சிறந்துளவுலகின்மாதேவிப்பேர்பெறீஇ
மறஞ்செயுமதன்வலிமாளமாய்த்தெலாந்
துறந்தனள்குரவனைத்தருவிப்போயினள். (சு)

நண்ணியநங்கணநாதர்தாமுமக்
கண்ணகன்ஞாலமுற்றெம்மைக்காணிய
வெண்ணநல்வினைகள்பல்வகைபுரிந்தவ
ரொண்ணியபலநகரிடத்துறைவினார். (எ)

அளக்கரும்விரதராயவரிருந்திடத்
துளக்கமினிலையுடைத்தூயனல்லமன்
கொளக்குறைபடாதபேரின்பங்கூட்டுண
விளக்கினனுலகினில்வீரசைவமே. (அ)

வேறு.

எவ்வகைச்சமயத்திற்குமிறைவனேயெனினுநேயஞ்
சைவநற்சமயத்துற்றான்சைவத்தும்வீரசைவத்
தவ்வவர்பிறவிநீக்குமல்லமன்விருப்பமுள்ளான்
மைவரிக்கயனெடுங்கண்மடவராலென்றான்வள்ளல். (கூ)

சமயமெவ்வகையினுந்தான்சைவமேலாயதென்கொ
லமையுநல்வீரசைவமதனினுஞ்சிறந்ததென்கொ
லிமையவர்பரவுமுக்கணெம்பிரானருள்செய்யென்ன
வுமையவள்வினவக்கேழுமுரித்தவன்விளம்புமன்றே. (கய)

உரைக்குமெச்சமயத்திற்குமுத்தரபாகஞ்சைவந்
தரிக்குமச்சைவத்திற்குத்தரமெனவீரசைவந்
தெரிக்குநற்காமிகாதிசிரத்தினிற்றிகழுங்கண்டா
யரிக்குரற்சிலம்பரற்றுமடிமலர்த்தடங்கணல்லாய். (கக)

புறந்தருசமயம்புக்குப்புறமலாச்சமயத்செய்தி
யறந்திகழ்சைவமுற்றுங்கதிற்சரிதாதியாற்றிச்
சிறந்துளவீரசைவஞ்சேர்ந்தபின்வீடுநண்ணு
நறுந்தளிர்கவற்றுமேனிநனைமலர்வல்லியன்னாய். (கஉ)

அருமறைமுடியுஞ்சேர்சாலாகமமுடியுமொத்துப்
பொருமறமிலாமன்முற்றும்பொருளினைவிளங்கக்காட்டித்
தருமுமறையதனுல்வீரசைவமேதலைமைத்தாமிவ்
விருமறுவறுநன்னூலுமிதிற்பிரமாணமாகும். (கங)

ஒன்றொருவிடயந்தன்னையுருசுவைநிறைவென்றாக்கி
யென்றுமெம்முகத்தளித்திட்டெம்பிரசாதங்கொண்டு
துன்றுறுகருமமுன்னாத்தூய்மையிவ்வீரசைவத்
தன்றிவேறொருமார்க்கத்தினடுக்குமோவடுக்கண்மாதே. (கச)

ஆதலால்வீரசைவத்தறிவினையறியச்செய்தான்
மாதர்மாதேவியாமுன்வண்கலைமாதினுக்கும்
மேதையாம்வசவனாதிமெய்யடியவர்க்குஞான
போதகாசிரியனென்னும்பொருவிலல்லமன்வேற்கண்ணாய். ()

பருவபேதத்தாற்பேதப்படுபொருள்பருவங்கண்டு
திருவின்மாமுனிவர்யோகர்சித்தர்கண்முதலானோர்க்குப்
பொருவிலாவல்லமப்பேர்புண்ணியன்புகன்றாட்கொண்டான்
குரவவார்குழன்மடந்தாயென்றனன்குன்றவில்லி. (கரு)

(அம்பிகை அல்லமன்பெருமையைச்சிவபிரானாற்கூறக்கேட்டு வணங்கினமை.)

அம்மையுண்மகிழ்வுபொங்கவல்லமன்பெருமைகேளா
மம்மர்செய்துளங்கலக்குமாயையைக்கடந்தானென்றன்
மெய்ம்மைநின்பவளவாயால்விளம்பநானறிந்தேனென்று
மும்மதில்வலிதொலைத்தமுக்கணாயகனைத்தாழ்ந்தாள். (கள)

(நூலாசிரியர்.)

அங்குமைமாதிரேனுமெல்லமன்பெருமைகூறித்
திங்கள்வெண்முகிழ்புனைந்தசெஞ்சடைப்பரமன்மேவ
விங்கருண்மேகமென்னுமிணையிலெங்குருகுகேசன்
மங்கலமுத்தியின்பம்வழங்குமத்தொழிலின்ஞான். (கஅ)

மூத்தவரிளைஞர்நோயர்முகிழ்முலையாதர்நல்ல
சீர்த்தொழிலாளர்பொல்லாத்தீத்தொழிலாளரொன்றும்
பார்த்திலன்யாவர்மாட்டும்பரிந்தருண்மாரிபெய்து
காத்தனனமலஞானகாரணன்குருகுகேசன். (கஎ)

இன்னவாறருளினானையிவருறவிவர்வேறென்று
தன்னைபோலுயிர்கட்கெல்லாமாருளொருங்குசெய்தே
யென்னையாளெனக்கொண்டாளுமிணையடிக்குருகுகேசன்
மன்னுமாதவர்கணெஞ்சமலர்தொறும்வாழாநின்றான். (உ0)

எல்லொளியிரவிபோலவிருண்மலமிரித்திலங்கு
மல்லமன்சரிதமோதிலறம்பொருளின்பவீடாம்
நல்லனபயனோர்நான்குநண்ணுவனிதனைக்கேட்க
வல்லநல்வினையினானுமற்றவைமருவிவாழ்வன். (உக)

மதியிலார்மதிஞராவர்மகவிலார்மகவுயிர்ப்பர்
நிதியிலார்நிதிபடைப்பர்நிலையிலார்நிலைத்துவாழ்வர்
பதியிலார்பதிகிடைப்பர்பழுதிலிவ்விருபத்தைந்து
கதியினானிரம்புகாதைகற்றவர்கூறக்கேட்பின். (உஉ)

மாசறுமல்லமப்பேர்வள்ளறன்சரிதந்தன்னி
னாசறுஞ்செய்யுளெல்லாமன்புடன்படிப்பார்தம்மை
யேசறுமனிதரென்னவிசைப்பதோகரித்தோல்போர்த்த
வீசனென்பதுவேயன்றியேதுமற்றேதுவம்மா. (உ௩)

நூல்செய்தகாலம்.

பார்கெழுசகாத்தமைஞ்ஞூற்றெழுபானான்காவ
தாகியகரநாமங்கொளாண்டிறுவிடைஞாயிற்றிற்
சீர்கெழுமல்லமன்றன்றிருவிளையாடற்காதை
கார்கெழுமிடற்றெங்கோமான்கருணைகொண்டியம்பினானே. ()

வாழ்த்து.

புண்ணியருலகில்வாழ்கபுலனுசெறுநோன்புவாழ்க
பெண்ணொருபாகன்பூசைபேண்வாழடியார்வாழ்க
கண்ணுதலொருவற்சார்ந்தகற்புடைச்சைவம்வாழ்க
வண்ணலல்லமன்சீர்கேட்குமாதரவாளர்வாழ்க. (உ௫)

பொருவரும்பூதிவாழ்கபூதியையணிவோர்வாழ்க
திருவளர்கண்டிவாழ்கசிறந்தவஞ்செழுத்தும்வாழ்க
குருவருள்வாழ்கமெய்யைக்கூறுநாவோர்கள்வாழ்க
வெருவரும்பிறவிதீர்க்கும்வித்தகர்வாழ்கவாழ்க. (உ௬)

அல்லமன்சரிதச்செய்யுளதனிலோர்செய்யுள்கற்க
வல்லவருத்தமோதவல்லவர்வாயவல்லோர்
செல்வமீதென்னவன்பாற்செவிப்புலனிறைக்கவல்லோ
ரொல்லவரும்பூமீதிலென்றும்வாழ்ந்திடுகவன்றே. (உ௭)

இருபத்தைந்தாவது-மான்மியகதி-முற்றிற்று.

ஆக - திருவிருத்தம் -கக௫௮.

பிரபுலிங்கலீலை-முற்றிற்று.

சிவப்பிரகாசசுவாமிகள் துதி

கருணைப்பிரகாசசுவாமிகளியற்றியது.

புனையெழிற்சேர் நெடியினுளோர்பொதுமகட்கண்டமைந்தர்
மனமொன்னைபுலவர்நெஞ்சமருளுமின்றமிழ்ப்பாமாலை
யினவிடையவற்கேசாற்றுஞ்சிவப்பிரகாசனென்னு
முனைவனெம்மடிகள்பாதமுளரிகள்சென்னிசேர்ப்பாம். (௧)

எவனொருநொடியிலெண்ணுநிசைத்ததோர்செய்யுண்மற்றைக்
கவிகள்பன்னுணினைந்தகாப்பியங்கட்குமேலா
மெவனுரைமுதனைத்தொடியைதருவிளக்கப்பேரோ
னவனெம்பிறப்பெமக்கீண்டளித்தபால்வாழ்கமன்னோ. (௨)

சிவப்பிரகாசதேசிகர் திருவடிவாழ்க.

சாலிவாகன சகாப்தம் ௲௭௱௪௰ல் கர௵ வைகாசி௴ ஆதிவாரத்தில் வேதாந்த சித்தாந்த வீரசைவ சமயாசாரியராகிய துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய பிரபுதேவர் சரித்திரமாகிய இவ்வரிய நூலின் கவிகளின் கருத்தை எளிதிலறிதற்பொருட்டு உறையூரில் வசிக்கும் தொண்டைமண்டல வேளாளர் குலதிலகராகிய மதுரைநாயக முதலியாரவர்கள்குமாரர் சொக்கலிங்கமுதலியாரவர்கள் முன்னிலையில் திருப்பரங்குன்றம் அருணசலசரணர் குமாரர் நாராயணசரணரால் எழுதப்பட்ட அநுதாரிகையுடன் ௸ சகாப்தம் ௲௮௱௨௰ல் சார்வரி௵ சித்திரை௴ ௨௰௨ சுக்கிலபக்ஷம் புதன் வாரம் திரிதிகை-திதி மிருகசீரிட நக்ஷத்திரம் அமிர்தயோகம் இவைகூடியசுபதினத்தில் தஞ்சைமாநகரம் ஸ்ரீகிருஷ்ணவிலாச அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது. இப்புத்தகத்தின் ஊதியம் ௸ திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோவிலில் ௸யூர்இராமலிங்கசரணரவர்களால் நடத்திவரும் கமலபாத்திரக்கட்டளைக்கு உபயோகிக்கப்படும்.

வேணும், பெரியநாயகிதுணை.

பிரபுலிங்கலீலை முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி	பிழை.	திருத்தம்.
௪	௬	௧	மெய்யாகிற்	மெய்யாக
௫	௰௧	௨	முங்கது	முகந்து
௩௧	௨௯	௩	கவினீர்	கவினீர்
௪௮	௭௫	௪	காசனி	காசணி
[illegible]	௭௬	௩	தனயை	தனயையை [டு
௮௰	௰௬	௩	வண்டிணைகொடு	வண்டிணைக்கொ
௮௭	௰௪	௩	வாப்தலின்று	வாய்தலினின்று
௮௯	௨௫	௨	மன்ஞன்	மன்னஞன்
௯௨		௬	மாதேயம்மை	மாதேவியம்மை
[illegible]	௪௮	௪	ஞுவிடை	ஞுகைவிடை
[illegible]	௫௰	௨	அடக்கி	அடங்கி
௱௪	௨௰	௨	மொரு	மொழி
௱௮	௫௧	௪	மாலமுண்ட	மாலமுண்ட
௱௰௩	௭	௩	இணங்குரு	யிணங்குரு
௱௨௧	௰௫	௨	பாதமும்	பாதகமும்
௱௫௭	௬௨	௨	யிணைவிரு	யிணைவிழி
௱௬௩		௰	ளுள்ள	லுள்ள